
திருக்கோயில்
பிப்ரவரி
2001
விலை
ரூபாய் ஐந்து





மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 12-1-2001 அன்று ''உழவாரப்பணி தொடக்க விழா'' மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப., அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை ஏற்றார்கள். மதுரை மாவட்ட ஆட்சியாளர் திருமிகு வீ. தங்கவேலு இ.ஆ.ப. அவர்கள் உழவாரப் பணியைத் தொடங்கி வைத்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர் / செயல் அலுவலர் திருமிகு போ. இராமராஜ் பிஎஸ்சி., பிஎல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.



# திருக்கோயில்


திங்கள் இதழ்



தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2032 விக்ரம ஆண்டு மாசி | மணி |
|---|---|---|
| 43 | பிப்ரவரி 2001 | 2 |



சிறப்பாசிரியர்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.
ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

**மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன்**

## பொருளடக்கம்


மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 12-1-2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்ற திருவாசகக் கருத்தரங்கில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப., அவர்கள் ''சிவபுராணம்'' பொருள் குறித்து ஆற்றிய ஆய்வுரை

ஆண்டாள் வளர்த்த அருந்தமிழ் — பாவை விழாவும் அதன் சிறப்பும்
- டாக்டர் வை. பழநிச்சாமி இ.ஆ.ப.

கந்தர் அநுபூதி - திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

திருநீறும் பெண்களும் - முனைவர் டி. செல்வராஜ்

பட்டினத்தாரும் பத்திரகிரியாரும்
- பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியன்

சிவ சிந்தனைகள் - திரு வி. இராசகோபாலன்

அருள்மழை பொழியும் அறுமுகச் செவ்வேள்
- ஸ்ரீதேவிகருமாரிதாசர்

ஒரு கொடியில் பூத்த இருமலர்கள்
- முனைவர் இரா. விஜயராகவன்

பிரணவ மந்திரம் - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

எது சரியான விடை? - அ. நிறைமதி



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

*திருக்கோயில்*

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

# மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 12.1.2001 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்ற திருவாசகக் கருத்தரங்கில் இந்துசமய அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ச.சாவர்க்கர், இ.ஆ.ப. அவர்கள் ''சிவபுராணம்'' பொருள் குறித்து ஆற்றிய ஆய்வுரை

மாணிக்கவாசகர் திருவடிகளே சரணம். அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருவாசகத்தில் முதற்பகுதியாக இருக்கின்ற சிவபுராணத்தைப் பற்றிச் சொல்வதற்குக் கிடைத்த வாய்ப்பினுக்காக இந்தத் திருக்கோயில் நிர்வாகத்தினருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

சிவபெருமான் சம்பந்தரைப் பாலைக் கொடுத்தும் அப்பரை சூலைக் கொடுத்தும், சுந்தரரை ஓலை கொடுத்தும், மாணிக்கவாசகரைக் காலைக் கொடுத்தும் ஆட்கொண்டார். அப்படி மாணிக்கவாசகர் திருவடிதீட்சை பெற்றபின்பு திருப்பெருந்துறையில் இந்த சிவபுராணத்தைச் சொல்லுகின்றார்.

சிவபுராணத்தைச் சொல்வதிலே அவருக்குச் சிந்தை மகிழ்கின்றதாம். அந்தச் சிவபுராணத்தை நாம் படிப்பதிலும், பிறர்சொல்லக் கேட்பதிலும் நமதுசிந்தை மகிழ்கின்றது. ஆகவேதான் இந்தச் சிவபுராணத்தைச் சொல்வதற்கு நானே முன்வந்து இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டேன்.

சிவபுராணத்திலே மாணிக்கவாசகர் மூன்று செய்திகளை நமக்குச் சொல்கின்றார். முதலில் இறைவனை வாழ்த்துகின்றார். போற்றுகின்றார். 'வெல்க' என்று சொல்லுகின்றார். அதற்கு அடுத்தபடியாக இறைவனுடைய இயல்புகள் - அவருடைய அருட்தன்மையைப் பற்றிச் சொல்கின்றார். மூன்றாவதாக தம்மிடம் குற்றம் இல்லாமல் இருந்தாலும், தம்மிடம் குற்றம் இருப்பது போன்று தம்முடைய குற்றங்களைச் சொல்லுகின்றார். இந்த மூன்று உண்மைகளையும் சிவபுராணத்தில் நாம் பார்க்கின்றோம்.

''நமசிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க.''
''இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க''

''பூங்கழல்கள் வெல்க''
''கோன்கழல்கள் வெல்க''
''சீரோன் கழல் வெல்க''


இவ்வாறெல்லாம் இறைவனை வாழ்த்துகின்றார்.

''ஆரா அமுதே'' என்கின்றார். 'சிவனார் அமுதே'' என்கின்றார்.

''மாசற்றஜோதியே'' என்கின்றார். 'ஆற்றின்ப வெள்ளமே'' என்கின்றார். 'பெருங்கருணைப் பேராறே'' என்கின்றார். இவ்வாறெல்லாம் இறைவனைப் போற்றி இறைவனுடைய இயல்புகளைக் கூறுகின்றார். 'சொல்லற்கரியான்' என்கின்றார். 'நடு இரவிலே நட்டம் பயில்கின்றவன்'' என்றெல்லாம் சொல்லி அவன் உயிர்களுக்கு எப்படி அருள்பாலிக்கின்றான் என்பதைச் சொல்கிறார்.

வேகத்தைக் கெடுப்பவன், பிறவியை அறுப்பவன் ஐந்தொழில்களைப் புரிந்து ஆருயிர்களுக்கு நன்மையைச் செய்பவன் - இவ்வாறெல்லாம் இறைவனுடைய இயல்புகளைச் சொல்லிப் பின்னாலே தன்னைப் பற்றிச் சொல்கின்றார். தன்னைப் பொய் மனத்தன் என்கின்றார். விலங்குமனத்தன் என்கின்றார். நாயிற்கடையேன் என்கிறார். சீலமில்லாச் சிறியேன் என்றெல்லாம் சொல்கின்றார்.

இந்தப் பின்னணியிலே திருவாசகத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற உண்மையை நாம் ஆராய்ச்சி செய்துபார்த்தால் சிவபுராணத்தை அதன்பொருள் உணர்ந்து பாராயணம் செய்தால் சிவபுரத்தை நிச்சயம் நாம் அடையலாம் என்றமுடிவுக்கு நாம் வரவேண்டும். அந்தக் கோணத்திலே எனக்கு ஒதுக்கப்பட்ட




இருபது நிமிடங்களிலே சிவபுராணத்தைப் பற்றி நான் சொல்லலாம் என்று இருக்கின்றேன்.

''நமசிவாய'' என்ற ஐந்தெழுத்தை அவர் சொல்லிச்சென்றது நாமெல்லாம் கடைத்தேறுவ தற்கு. 'நமசிவாய' என்ற சொல் மந்திரம் என்று சொல்லப்பட்டதா? அல்லது இறைவனுடைய திரு நாமம் என்று சொல்லப்பட்டதா? என்ற ஆராய்ச்சி எல்லாம் தேவை இல்லை என்று நான் கருதுகிறேன். மந்திரமாக இருந்தாலும் சரி, சிவபெருமானுடைய திருநாமமாக இருந்தாலும்சரி, வீடுபேறு அடைவ தற்கு உரிய தூண்டுகோலாக, ஊன்றுகோலாக, திறவு கோலாக அது நமக்கு இருக்கின்றது என்பதைத்தான் நான் வற்புறுத்திக் கூறவிழைகின்றேன்.

'நமசிவாய' என்ற ஐந்தெழுத்தை மாணிக்க வாசகர் சொல்லிச்சென்றது நாமெல்லாம் கடைத் தேறுவதற்காக, இந்த உலகத்துன்பத்திலிருந்து நாமெல் லாம் விடுபடுவதற்காக அவர்சொல்லிய மந்திரம் 'மகாமந்திரம்' என்று சொல்லவேண்டும்.

'நமசிவாய' என்றால் 'வணக்கம் சிவபெருமா னுக்கு' என்று பொருள் சொல்லுகின்றார்கள். இந்த 'நமசிவாய'' என்ற ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல் லாத அருளாளர்களே கிடையாது. குருஞானசம்பந்தர் இந்த ஐந்தெழுத்து மந்திரம் பற்றிச் சொல்கிறார்.

"ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ
பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் சென்றோதாய்
மனமே உனக்கென்ன வாய்''

என்கிறார்.

இப்பாடலில் நீ ஐந்தெழுத்தைச் சொல்லா விட்டால் உனக்கு வாய் எதற்கு? என்று கேட்கிறார். 'தென்னாடுடைய சிவனே போற்றி'' என்று சொன் னால் பதிலுக்கு 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று சொல்லமாட்டார்கள். சொல்ல பலர் வெட்கப் படுவார்கள். வாயைத்திறந்து சொல்லாவிட்டால், அப்படிப்பட்டவர்களுக்கு வாய் எதற்கு? என்று குருஞான சம்பந்தர் 'உனக்கென்ன வாய்?'' என்று கேட்கிறார்.

சிவவாக்கிய சித்தரும் இதைப்பற்றிச் சொல்லு கின்றார்.

''வஞ்சகப் பிறவியை மனத்துள்ளே விரும்பியே
அஞ்செழுத் துண்மையை அறிகிலாத மாந்தர்காள்?
வஞ்சகப் பிறவியை வதைத்திட வல்லீரேல்
அஞ்செழுத்தின் உண்மையை அறிந்துகொள்ளல்
ஆகுமே''

என்கிறார். இந்தப்பிறவியினாலே கிடைக்கின்ற இன்ப, துன்பங்களை குறிப்பாக இன்பத்தை அனுபவிப்ப தற்காக இந்தப் பிறவியை விரும்புகின்றவர்கள் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் பிறவியை விரும்பு வார்கள் என்று சிவவாக்கியர் கூறுகின்றார்.

ஐந்தெழுத்து உண்மையை எப்படி அறிந்து கொள்ளமுடியும்? அதன் உண்மையை அறிந்தால் தான் சிவபுரத்துக்குச் செல்லமுடியும் என்று மாணிக்க வாசகர் கூறுகின்றார். இந்தப்பிறவியை ஒழிப்பதற் கான முயற்சியை பயிற்சியை மேற்கொள்ளமுடி யும் என்பதைத்தான் சிவவாக்கியர் மேற்கூறிய பாட லிலே சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐந்தெழுத்து உண்மையை அறிந்துகொள்வ தற்கு நாம் இறைவனை எப்பொழுதும் சிந்தித்து இருக்கவேண்டும் என்பதை மாணிக்கவாசகர் 'இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்று சுட்டிக்காட்டுகின்றார். எந்த நேரமும் இறை வனை நினைத்துக்கொண்டு இருந்தால் என்தொழில் என்னாவது? என் ஜீவனத்திற்கு என்ன செய்வது என்று கேட்பார்கள் சிலர். ஆனால் அது தவறு. இறைவனை நினைப்பதற்கு நேரம் ஒதுக்கவேண்டியது இல்லை. இருபத்து நான்கு மணிநேரமும் நனவிலும், கனவி லும் இறைவனை நினைத்துக்கொண்டு இருக்கமுடி யும். அப்படி ஒரு சக்தியை இறைவன் ஆருயிர்களுக் குக் கொடுத்து இருக்கின்றான்.

மாணிக்கவாசகர் 'இமைப்பொழுதும் நீங்கா தான் தாள் வாழ்க'' என்று சிவபுராணத்தில் சொல்லி விட்டு, திருச்சதகத்தில் வேறொன்று கூறுகின்றார்.

''நாடகத்தால் உன்அடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்பு எனக்கு என்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எமை உடையானே''

என்கிறார்.

தம்முடைய அன்பை நாடகம் என்று சொல்லு கின்றார். நாடகத்திலே அவர் நடிக்கிறாராம். அந்தக் கூட்டத்திலே அப்படியே நுழைந்து அவர் வீடுபேறு உலகத்திற்குப் போய் விடுவாராம். இறைவனை ஏமாற்றி வீடுபேறு பெற்றுவிடுவேன் என்று சொல் வதுபோல் சொல்லி 'எனக்கு இடையறாத அன்பு வேண்டும்'' அதற்கு அருள்புரிவாய்'' என்று வேண்டு கின்றார்.

''இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' எனவும் சொல்லுகின்றார். இங்கே 'இடையறாத அன்பு வேண்டும்'' என்றும் வேண்டு கின்றார். இது முரண்பாடா என்றால் இல்லை. முரண்பாடு போலத் தோன்றினாலும் இதில் முரண் பாடே கிடையாது. ஒரு தாய் தன் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டும்போது 'நான் பெற்ற ராசாவே'' என்பார். மறுகணமே 'என்னைப் பெற்ற இராசாவே'' என்பார். இவர் குழந்தையைப் பெற்று இருக்கின்றார். அதே நேரத்திலே அந்தக் குழந்தை தன்னைப் பெற்றதாகவும் கூறுகின்றார். அது எப்படி முரண்பாடு இல்லையோ, அது போன்றதுதான் மாணிக்கவாசகர் 'இமைப்பொழுதும் நீங்காதான்'' என்று முதலில் கூறி 'இடையறா அன்பு எனக்கு உன் ஊடகத்தே நின்றுருகத் தந்து அருள்'' என்று வேண்டுவதும் ஆகும்.

ஏசுநாதரைப் போன்று மாணிக்கவாசகரும் 33 ஆண்டுகள்தான் இந்த நிலவுகிலே வாழ்ந்தார். இந்த 33 ஆண்டுகள் வாழ்வதே அவருக்குத் துன்பமாகத் தெரிந்தது. இன்னும் அவருக்கு வீடுபேறு கிடைக்க வில்லை என்று அவர் கருதிய காரணத்தாலே தாம் இறைவனிடம் செலுத்துகின்ற அன்பு உண்மையான தாக இல்லையோ என்று அவர் நினைத்துப் பார்க் கிறார்.

இதைப்போன்று அப்பைய தீட்சிதர் என்று பெரிய ஞானி, ஒப்பற்ற அருளாளர், அவருக்கும் இப் படி ஒரு சந்தேகம் வந்தது. தாம் செலுத்தும் அன்பு உண்மைதானா? அப்பழுக்கு அற்றதுதானா என்று தம்மைத்தாமே சோதித்துக் கொள்கின்றார். தன்அன்பு நாடகம்தானா என்று நினைத்துத் தம்முடைய சீடர் களை எல்லாம் அழைத்து 'நான் ஊமத்தம்பூவை யும், ஊமத்தங்காயையும் சாப்பிடுகிறேன். சாப் பிட்ட உடனே என் மதியை இழந்துவிடுவேன். அப் பொழுது என் உள்ளம் என்ன நினைக்கின்றது? என் வாய் என்ன சொல்லுகிறது? நீங்கள் அதைக் குறித்துக் கொள்ளுங்கள்'' என்கிறார்.

அந்த நேரத்திலே அவருடைய திருவாயிலே இருந்து வெளிப்பட்டவைதான் 'உன்மத்த பஞ்சாசத்'' தமிழில் 'ஆத்மார்த்ததுதி'' என்கின்ற ஐம்பது சுலோகங் கள். தம்மைத்தாமே சோதித்துக்கொண்டபிறகு இறைவ னிடம் அவர் செலுத்துகின்ற அன்பு, உண்மையானது என்பதை அவர் தெரிந்து கொள்ளுகின்றார். அதைப் போலவேதான் மாணிக்கவாசகரும் 'நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து'' என்கின்றார்.

அதற்குப்பிறகு இறைவனைப் பற்றிச் சொல்கின்றார். 'ஏகன் அநேகன் இறைவன் அடிவெல்க'' என்கின்றார். இறைவனுடைய சொரூப லட்சணத்தை யாரும் பார்த்தது இல்லை; அவருடைய தடத்த லட்சணத்தைத்தான் பார்த்திருக்கிறார்கள். அதனாலேயே இறைவன் ஒருவன். பல்வேறு தோற்றங்களிலே அவன் காட்சி அளிக்கிறான் என்று சொல்லுகின்றார்.

திருக்கழுக்குன்றப் பதிகத்திலே 'கணக்கில்லாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே'' என்கின்றார். பல்வேறு கோலத்திலே அவர் முன்னாலே வந்து காட்சி அளித்ததனால் இதைச் சொல்லுகின்றார். நான் ஏற்கனவே சொன்னதைப் போல சுந்தரருக்கு வேதியனாக வந்து காட்சி கொடுத்தார். அப்பருக்குக் கட்டமுது கொடுத்து வயோதிகனாகக் காட்சி கொடுத்தார். ஞானசம்பந்தருக்குப் பார்வதி சமேதராகக் காட்சிகொடுத்தார். மாணிக்கவாசகருக்கும் 'நிலம் தன்மேல் வந்து நீள் கழல்கள் காட்டி'' பல்வேறு விதமாக அவர் தோற்றம் அளித்த காரணத்தினாலே அவர் 'ஏகன் அநேகன்' என்கின்றார். 'இறைவனடி போற்றி'' என்கின்றார். 'வேகம் கெடுத்த வேந்தன் அடி வெல்க'' என்கின்றார். போக்குவரத்துத்துறையில் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த வேகத்தடை போட்டு வைப்பார்கள். இறைவன் நமது மனவேகத்தை - மனம் சுற்றி அலைவதைக் கட்டுப்படுத்துகின்ற காரணத்தால் 'வேகம் கெடுத்த வேந்தன்'' என்று அவரைப் போற்றுகின்றார் மாணிக்கவாசகர்.

பிறகு முக்கியமாகப் பிறவியறுக்கும் அவருடைய அருட்தன்மையைப் பற்றி ஆறுஇடங்களிலே போற்றுகின்றார்.

"பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள்
வெல்க''

"மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி''
''பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்''
''அல்லல் பிறவி அறுப்பானே''
''பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே''
''மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே''
''கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே''

பிறவியை ஒழிப்பதற்கு - பிறவியை நீக்குவதற்கு உரியவன் இறைவன்தான் - இவனைத் தஞ்சம் அடைந்தால்தான் பிறவியை ஒழிக்கமுடியும் என்று சொல்லுகின்றார்.

இறைவன் பிறவிகொடுத்த காரணம்தானே இன்பமும், துன்பமும் அடைகின்றோம். இறைவன் பிறவியே கொடுக்கவில்லை என்றால் நமக்கு லாபமும் கிடையாது, நஷ்டமும் கிடையாது. இன்பமும் கிடையாது, துன்பமும் கிடையாது. ஏன் பிறவியைக் கொடுத்து இறைவன் நம்மைக் கஷ்டப் படுத்துகின்றான் என்று நான் நினைப்பதுண்டு.

நான் படுகின்ற துன்பம், என்னைச் சுற்றியிருக்கிறவர்கள் படுகின்ற துன்பம், மக்கள்படுகின்ற துன்பத்தை நினைக்கின்றபோது இவ்வளவு துன்பம் இருக்கின்றதே! ஒரு இளம்பெண் தன் கணவனை இழந்து விடுகின்றாள். பெற்றோர்கள் இளவயது பிள்ளைகளை இழந்துவிடுகிறார்கள். இப்படிஎல்லாம் துன்பங்கள் அடைந்து இறைவன் வழங்கும் பேரின்பத்தை அடையவேண்டுமா என்று சிந்திக்கத் தோன்றுகின்றது. ஆனால் இந்தச்சிந்தனை ஏற்றுக் கொள்ளக்கூடிய சிந்தனை அல்ல.

பள்ளிக்குச் செல்வது மாணவர்களுக்குக் கஷ்டம்தான். ஆனால் அவர்களின் விருப்பத்தைக் கேட்டுப் பள்ளிக்கு அனுப்புவதில்லை பெற்றோர்கள். பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிடுவார்கள். அதற்குப் பின்னாலேதான் பெற்றோர் தங்களைப் பள்ளிக்கு அனுப்பியது சரி என்பதைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்வார்கள். அதைப்போன்று பேரின்பத்தைக் கொடுக்க வேண்டும் என்ற பேரவாவினாலே இறைவன் நமக்கு சூக்கும உடலைக் கொடுத்துப் பெற்றோர்கள் மூலமாகத் தூலஉடலைக் கொடுத்து, இன்பதுன்பங்களை அனுபவிக்கச் செய்து, இப் பிறவியை அளிக்கின்றார்.

இந்தப் பிறவியை எப்படி நாம் அறுக்கமுடியும்? பாவங்களைச் செய்துகொண்டு இருக்கிறோம். 'அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி'' என்கின்றார் மாணிக்கவாசகர். பாவ, புண்ணியங்களைச் செய்துகொண்டிருக்கின்ற நாம் எப்படி அவற்றைப் போக்கமுடியும்?

பாவத்தைப் புண்ணியத்தால் போக்கிடமுடியும்? ஆனால் புண்ணியத்தைப் புண்ணியத்தாலே போக்கமுடியாது. ஏனென்றால் ஒருவிதத்திலே புண்ணியமும் பாவம்தான். ஏனென்றால் பாவமும் புண்ணியமும் வீடுபேற்றை அடைவதற்குத் தடைக்கற்கள். வீடுபேறு நாம் பெறமுடியாமல் பாவம் தடுத்தால் என்ன? புண்ணியம் தடுத்தால் என்ன? நமக்கு இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் - இவைகள் எல்லாம் கூடி நாம்பக்குவம்

அடையும் காலம் வரையிலும் இறைவனுடைய திருவடிகளிலே நாம் ஐக்கியம் ஆகிவிடமுடியாது. அதற்கு என்ன செய்யவேண்டும்?

பாவம் செய்யக்கூடாது. புண்ணியம் செய்யக் கூடாது. பாவமும் புண்ணியமும் ஒன்றுதான் என் றால் நாம் பாவமே செய்துகொண்டிருக்கலாமா என்றால் அதுஅப்படி அல்ல. கையிலே அழுக்கு இருக்கிறது. சோப்புபோட்டு அந்த அழுக்கை நீக்கி விடலாம். சோப்புநுரை கையில் அப்படியே இருக் கும். தண்ணீரை ஊற்றிக்கழுவி துணியைத் தோய்த் துத் துடைத்தால்தான் கையழுக்கு அத்தனையும் நீங்கும். அதைப்போல பிறவியைப் போக்க என்ன வழி சொல்லப்படுகின்றது என்றால், நம்மிடம் இருக்கும் 'நான்' அதாவது 'ஆத்மா' நான்மறையை அறிந்து பயனில்லை. 'நான்' மறைய வேண்டும். அது எப்போது முடியும் என்றால் ஆத்ம சமர்ப்பணம் அதாவது சரணாகதிசெய்தால்தான் பிறவியைப் போக்கிக்கொள்ள முடியும். பிற வியை அறுப்பதற்கான வழி பிரபத்தி தான் என்று

''சிந்தை மகிழ சிவபுராணம் தன்னை
முந்தைவினை முழுதும் ஓய உரைப்பன்யான்''

என்று கூறுகின்றார் மாணிக்கவாசகர். விடமாட்டேன், என் முந்தைவினை முழுதும் ஓயும் வகையில் சிவபுராணத்தைச் சொல்லிக்கொண்டு இருப்பேன் என்கின்றார் மாணிக்கவாசகர்.

சிவபுராணம் என்றால் சிவனைப் பற்றிய செய்தி, மாணிக்கவாசகரைப் போல நாமெல்லாம் சிவபுராணத்தைச் சொல்லிக்கொண்டே இருந்தால் தான் முந்தைவினை முழுதும் ஓயும். ஆத்மசமர்ப் பணம் அதாவது பிரபத்தி செய்தால்தான் முந்தை வினை முழுவதையும் ஒழிக்கமுடியும். சென்ற பிறவியிலே ஒருலட்சபோய் கடனை ஏற்கனவே நாம் வாங்கி இருப்போமேயானால் இப்பிறவியிலே பிராரத்த கருமத்தாலே பத்தாயிரம் ரூபாய் கடனை அடைத்து, இருபதினாயிரம் கடனைப் புதிதாகப் பெற்றுப்போனால் அடுத்த பிறவியிலே நாம் அடைக்கவேண்டிய கடன் ஒருலட்சத்தி பத்தாயிரம் ரூபாயாக ஆகிவிடும். அதைப்போல நாம் கடனை வளர்த்துக் கொள்ளக்கூடாதென்றால் 'முந்தைவினை முழுதும் ஓய சிவபுராணத்தை ஓதவேண்டும்' சிவ புராணத்தைச் சிந்திருக்கவேண்டும் என்கின்றார் மாணிக்கவாசகர்.

எளியவகையிலே சிவபுராணத்தைச் சிந்தித் திருக்க நமக்கு வழிமுறைகளைக் கூறியுள்ளார் மாணிக்கவாசகர். பிறகு அவர் சொல்கிறார் பல்வேறு பிறவியை நான் எடுத்திருக்கிறேன் என்று.

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்''

என்று இத்தனை பிறவிகளிலும் பிறந்து இளைத்தேன் என்று கூறுகின்றார். இத்தனை பிறவிகளையும் பிறப்ப தற்குக் காரணமான முன்வினையை முழுதும் ஓய்விப் பதற்குச் சிவபுராணத்தை ஓதவேண்டும் என்கின்றார் மாணிக்கவாசகர்.

இந்தப்புல் என்பது ஓரறிவு உயிர், புல் என் றால் அதையும் சாதாரணமாக நினைக்கவேண்டாம். திருமால், இந்திரனுடைய அகங்காரத்தை அழிப்ப தற்காக அக்கினியும் எரிக்கமுடியாத புல்லைத்தான் ஆயுதமாக அனுப்பினார். சீதையைத் துன்புறுத்திய காகாசுரனை வதம்செய்தவதற்காக இராமர் அந்தப் புல்லையே பிரம்மாஸ்திரமாக அனுப்பினார். வாமன அவதாரத்திலே மகாபலி மூன்றடிநிலம் கொடுப்பதைத் தடுப்பதற்குக் கெண்டியிலே வண் டாக நுழைந்த சுக்கிராச்சாரியாரின் கண்ணைக் குத்த வும் வாமனர் இந்தப்புல்லைத்தான் பயன்படுத்தி னார். ஆகவே புல்லாகிய பிறப்பும் ஒரு சிறப்புப் பெற்றதுதான்.

இதிலே கல்லாய்ப் பிறந்ததாக மாணிக்க வாசகர் கூறியுள்ளார். கல்லாய் எப்படி பிறப்பது? அது அறிவுடைப் பொருள் அல்லவே! அசேதனப் பொருள்தானே! கல்லாய்ப் பிறந்ததாகச் சொல்கி றாரே! அது எப்படி சரியாக இருக்கமுடியும் என் றெல்லாம் நினைத்துப் பார்த்தால், மாணிக்கவாசகர் சொல்லிய திருவார்த்தைக்குப் பொருள் இல்லாமல் இருக்காது. அவர் சரியாகத்தான் சொல்லி இருப்பார். அவர் கல்லாய்ப் பிறந்ததாகச் சொல்லியிருப்பது, கல்லுக்குள் தேரையாகப் பிறந்ததைத்தான் அவர் சொல்லியிருக்கிறார் என்று நினைக்கின்றேன்.

அப்படிஎன்றால் தேரை என்றே சொல்லி இருக்கலாமே! ஏன் கல்லென்று சொல்லியிருக்கிறார்? இரவுநேரங்களில் அந்தக் காலத்தில் அரசன் நகர்வலம் செல்வதுண்டு. ஊர்மக்கள் எல்லாம் எப்படி இருக் கிறார்கள்? இந்த ஆட்சியைப்பற்றி என்னவெல் லாம் சொல்கிறார்கள் என்பதை நகர்வலம் வந்து அரசன் அறிந்துகொள்வான். அப்பொழுது இந்த ஊரேஉறங்கிக்கொண்டு இருக்கிறது என்று அமைச்சர் அரசரிடம் சொன்னால், இந்த ஊரா உறங்கிக்கொண் டிருக்கிறது? ஊரிலுள்ள மக்கள் உறங்கிக்கொண் டிருக்கிறார்கள் என்று பொருள். அதைப்போல

கல்லாய்ப் பிறந்தேன் என்றுசொன்னால் கல்லுக்குள் தேரையாய்ப் பிறந்தேன் என்று மாணிக்கவாசகர் சொல்வதாக நாம் பொருள் கொள்ளவேண்டும்.

இந்தத் தேரை ஜென்மத்தைப் பற்றித் திண்டுக்கல் அருகே பிறந்த சற்குரு சச்சிதானந்த சுவாமிகள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். கல்லை வணங்குகின்றவர்களுக்கெல்லாம் அடுத்த பிறவி தேரை ஜென்மம்தான் என்று அவர் சொல்கிறார். கல்லைக் கோயிலிலே ஒரு கண்காட்சியாக அல்லது ஏமாற்றுக்கூடமாக ஆக்கியிருந்தார்களோ என்னவோ! அந்தக் காரணத்தினாலே அவர் கல்லை வணங்குகிறவர்கள் தேரையாகப் பிறப்பார்கள் என்று சொல்லி இருக்கின்றார். உண்மையில் அவர் அப்படி சொல்லி இருந்தாலும் அக்கருத்தைத் தவறு என்றும் சொல்லமுடியாது. சரி என்றும் சொல்லமுடியாது. ஏனென்றால் வேறுபல ஞானிகள் ஆதாரத்தில் இருந்து தான் நிராதாரத்திற்குச் செல்லவேண்டும் என்றெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். சிலருக்கு ஆதாரம் இல்லாமலே நேரடியாக இறைவனுடன் ஐக்கியமாகி விடக்கூடிய வழிமுறைகள் தெரிந்திருக்கும். ஆனால் எல்லோருக்கும் அப்படி தெரிந்திருக்க இயலாது. திருவுந்தியாரிலே 'திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார்

"ஆதாரத்தாலே நிராதாரத்தே சென்று
மீ தானத்தே செல்க உந்தீபற
விமலருக்கு இடம்அதென்று உந்தீபற''

என்று சொல்லியிருக்கின்றார். இந்த ஆதாரத்திலிருந்தே நிராதாரத்திற்கு - விமலர் இருக்கின்ற இடத்திற்குச் செல்லமுடியும் என்று சொல்லுகின்றார். அதனால்தான் நம்மைப்போல் எளியவர்களுக்குத் திருக்கோயில்கள் தேவை. ஞானியர்களுக்குத் தேவை இல்லை என்றெல்லாம் சொல்லுவேன்.

அடுத்து நம் சிந்தனைக்கு இன்னொன்றைக் கூறுகின்றார்.

"எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்
எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று
வீடுற்றேன்''

என்கின்றார். அவர் சிவபுராணம் பாடியபோதே வீடுபேறு அடைந்திருந்தால் அதற்குப்பின்னாலே 50 தலைப்புகளில் பாடியுள்ள அப்பாடல்களை எல்லாம் பாடியிருக்கமுடியாது. அதற்கும் பின்னாலே 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என்று சிவபெருமானே கேட்க, காமம் சான்ற ஞானப்பனுவல் என்று சொல்லப்படுகின்ற திருக்கோவையாரையும்பாடி இருக்கமுடியாது.

அப்படியானால் எப்படி அவர் அன்றேக்கே 'வீடுற்றேன்'' என்று பாடியிருக்கின்றார்? அதைச் சிந்தித்துப் பார்த்தால் அவருக்கு வீடுபேறு கிடைப்பது அப்பொழுதே உறுதியாகிவிட்டது. அதுவும் விரைவில் கிடைப்பது உறுதியாகிவிட்டது. இந்த உறுதிபற்றி - விரைவுபற்றி வந்த காலவழுவமைதி என்றுதான் நான் எடுத்துக்கொள்கின்றேன்.

அதற்குப்பின்னாலே அவர் தன்னைப் பற்றிச் சொல்லுகின்றார்.

'மெய்ஞ்ஞானம் இல்லாதவன்''
'அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால்
கட்டப்பட்டவன்''
'புறந்தோல் போர்த்துஎங்கும்' புழுஅழுக்கு மூடி
மலஞ்சோர் ஒன்பது வாயிற்குடில்''

என்று தன்னுடைய தூலவுடலை வெறுப்பது போன்று சொல்லுகின்றார்.

பஞ்சபூதங்களினாலே - மாயையினாலே - மாயை சம்பந்தப்பட்ட காரணத்தினாலே இந்த உடல் விரும்பத்தக்கதும், வெறுக்கத்தக்கதுவுமாக இருக்கின்றது. ஒரு இடத்திலே அவர் அப்படி வெறுத்துச் சொல்லுகின்றார். இன்னொரு இடத்திலே 'ஆத்ம சுத்தியிலே உன்னையான் இழந்து ஓம்புகின்றேன்'' என்று சொல்லுகின்றார். சிந்தித்துப் பார்த்தால் இதிலும் முரண்பாடு ஏதும் இல்லை என்பது தெரியும்.

திருமூலரும் சொல்கின்றார். அவரும் உடலை வெறுக்கத்தக்கதாக நினைத்திருந்தாராம்.

''உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான்இருந்து ஓம்புகின்றேனே''

என்று சொல்லுகின்றார்.

அதைப் போன்றே மாணிக்கவாசகரும் உடம்பினுக்குள் இருந்துகொண்டு ஓம்புகின்றாராம். வீட்டிற்கு ஒரு பணக்காரர் வந்தாலோ அல்லது பெரியபதவியில் இருப்பவர் வந்தாலோ, நம்வீட்டை நாம் சுத்தம்செய்து வைப்போம். ஏன் வெள்ளை கூட அடித்து வர்ணமும் தீட்டிவைப்போம். அப்படியானால் இறைவன் குடிகொள்ளக்கூடிய இந்த உடலை நாம் எப்படி போற்றி வைத்துக் கொள்ள

வேண்டும். அதை எப்படி ஓம்பவேண்டும் என்பதை மாணிக்கவாசகர் அறிவுறுத்துகின்றார். இதை எல்லாம் சொல்லிவிட்டு

"நலம்தான் இல்லாத சிறியேற்கு நல்கி
நிலம்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி''
''நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தீயாவான தத்துவனே''

என்று சொல்கின்றார். நலம் கிடையாது எனக்கு. பொல்லா வினையேன். விலங்கு மனத்தன். அப்படி இருந்தும் நாயினும் கடையேன் ஆகிய எனக்கு இறைவன் தம் நீள்கழல்கள்காட்டித் திருவருள் செய்தார் என்று சொல்லுகின்றார்.

பசுவானது உயிர்க்கன்றுக்கும் பால்சுரக்கின்றது. தோற் கன்றைக் காட்டினாலும் பால் சுரக்கின்றது. பொய்யாக நாம் கைதூக்கி இறைவனைத் தொழுதால் கூட அதற்கு உரிய பலன் உண்டு.

இந்த நாயிற்கடையேன் என்பதுபற்றி நாம் சிறிது சிந்திக்கலாம். நாய் நன்றியுள்ள பிராணியாக இருந்தாலும், அது ஒரு இழிவான பிராணி என்று கருதித்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார். நாய் ஏன் இழிவான பிராணி? தானுண்ட உணவை அது திரும்பவும் கக்கிச்சாப்பிட்டுக்கொள்ளும். அது ஒரு காரணம். பலர் அறிய இன்புற்று இருக்கும். இந்த இரு காரணங்களினாலே நாய் ஒரு இழிபிராணியாகக் கருதப்படுகின்றது. இதனாலே தன்னை 'நாயினும் கடையேன்'' என்று சொல்லுகின்றார்.

'நாயினும் கடையேன்'' என்று சொல்லும் மாணிக்கவாசகர் உண்மையில் அப்படிப்பட்டவர் அல்ல. நான் முன்பு சொன்னதைப் போல இந்த நிலவுலகிலே - தூலஉடலிலே வாழ்வது அவருக்குப் பிடிக்கவில்லை. சஷ்டியப்த பூர்த்தியும், சதாபிஷேகமும் பண்ணவேண்டும் என்று அவர் நினைக்கவில்லை. விரைவிலேயே இறைவனிடம் ஐக்கியமாகி விடவேண்டும் என்று அவர் நினைத்த காரணத்தினாலே தன்னை அவர் தாழ்த்திச் சொல்லுகிறார்.

ஆண்டாள்கூட திருப்பாவையின் முதற்பாட்டிலே - 'மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாள்'' என்று தொடங்கும் பாடலிலே 'நாராயணனே நமக்கே பறை தருவான்'' என்று சொல்லுகிறார். 'நாராயணன் நமக்குப் பறை தருவான்'' என்று சொன்னால் போதும். பறை என்றால் தாளக் கருவியல்ல. நாம் அடைகிற பயன்; வீடுபேறு. அதை நமக்குக் கொடுப்பான். யார்? 'நாராயணனே'' என்று ஏகாரத்தில் சொல்லுகிறார்.

ஆண்டாள் வைணவப் பெண் ஆகையால் பெருமானைத் தவிர வேறுயாரையும் அவர் நினைக்காத காரணத்தினாலே அந்தப் பெருமாளே - நாராயணனே அந்த வீடுபேற்றினை அளிக்கமுடியும் என்று சொல்லுகிறார். இடையிலே 'நமக்கே'' - நமக்கு என்றால் நம் அனைவருக்கும் ஆயர்பாடிப் பெண்கள் எல்லோருக்கும் இந்தப்பறை கிடைக்குமா என்றால் கிடைக்கும். 'நமக்கே' என்றால் சாதாரண மானவர்கள்; குற்றம் உள்ளவர்கள். அகிஞ்சனர்கள் எந்த ஒரு தகுதியும் இல்லாதாவர்கள். இவர்களுக்கும் அவன் வீடுபேறு தருவான்; ஆகவே எல்லோரும் வாருங்கள் என்று ஆண்டாள் கூறுகின்றார்.


இறைவன் நமக்கு அளிக்கும் வீடுபேறு ஒரு விலைமதிக்கமுடியாத ஒன்று. பேரின்பத்தைக் கொடுக்கக்கூடியது. துன்பத்தை ஒழிக்கக்கூடியது. அவர் அதற்குஉரிய முழுவிலையை நம்மிடம் வாங்குவது இல்லை. நாம் பார்க்கிறோம் 'ஆடிக்கழிவு'' 'புது வருடக்கழிவு'' என்று விலையைக் கூட்டிக் குறைத்துப் போடுவார்கள். இறைவனிடத்திலே எப்போதும் பாதிவிலைகூட கிடையாது. சலுகை விலைதான். நாம் நம்முடைய ஆர்வத்தை ஒரளவிற்கு வெளிப்படுத்தி, அதற்கான பயிற்சி, முயற்சிகளை எல்லாம் மேற்கொண்டால் நிச்சயம் அவன் வீடுபேறு தருவான். அந்த வகையிலேயே 'நலம்தான் இல்லாத சிறியேற்கு நல்கி'' என்று அப்படிப்பட்டவர்களுக்குக்கூட இறைவன் வீடுபேறு தரக் காத்திருக்கின்றார். அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று மாணிக்கவாசகர் சொல்லுகின்றார்.

''மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே'

என்று ஐம்புலன்களாலே வருகின்ற துன்பத்தை ஒழிப்பதற்கு ஐந்தெழுத்தை ஓதி, நாம் முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்றெல்லாம் சொல்லுகின்றார்.

ஐந்தெழுத்தை ஓதிப் பயன்பெற்றவர்கள் அநேகர். காலையிலே 'திருவாதவூர் தலபுராணம்'' நூலை எனக்குக் கொடுத்தார்கள். அந்தநூல் இன்று மாலை இங்கே வெளியிடப்பட இருக்கின்றது. அதிலே ஒரு செய்தியைப் பார்த்தேன்.

பிருகு முனிவரின் மகள் அரஜா என்பவள் - அவளுக்கு அநேக துன்பங்கள் இழைக்கப்பட்டன. புராணங்களில் உள்ள கதைகளை நம்பலாமா?



திருவாசகக் கருத்தரங்கில் ''திருக்கோயில்'' ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம் அவர்கள் ''திருக்கோத்தும்பி'' எனும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்துகின்றார்.

நம்பக்கூடாதா என்பது வேறுவிஷயம். அவற்றில் நமக்குப் பயன்படக்கூடிய பல செய்திகள் இருக்கின் றன. 'திருவாதவூர் தலபுராண''த்திலே இந்த அரஜா 'நமச்சிவாய'' மந்திரத்தை உருசெய்து, தவம் இயற்றி யாரும் பெறமுடியாத பலனையும், சிவ தத்துவத்தையும் பெற்றாள் என்று சொல்லப்பட் டிருக்கிறது.

அதைப்போல 'நமச்சிவாய'' என்ற மந்திரத்தை நாம் நினைத்து நாமும் சிவபுராணத்தை ஓதினால் சிவபுரம் செல்லலாம் என்பதுதான் இந்தச் சிவ புராணம் நமக்கு உணர்த்தும் செய்தியாக உள்ளது.

இறுதியாக நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது ஒருதலைவி, தலைவ னுக்கு ஆறுதல் சொல்லுவதாக ஒருபாடல் இருக் கிறது.

''துன்பம் சூழும் வேளையில்  
என்னைக் கொஞ்சம் பாரும்,  
இன்னல் யாவும் தீரும்''

என்று ஒரு பாடல். எனக்குத் தோன்றுவது.

''பிறவித்துன்பம் சூழும் வேளையில்  
அவனைக் கொஞ்சம் நினையுங்கள்  
ஐந்தெழுத்தைக் கொஞ்சம் நினையுங்கள்  
கன்னல் போன்ற சுவையும், இன்பமும் சேரும்''

என்று கூறிக்கொண்டு நாமெல்லாம் சிவபுராணத்தை திருவாசகத்தை - பன்னிரு திருமுறைகளை ஓத வேண்டும்; இந்த உலகத் துன்பங்களிலிருந்து விடு பட்டு வீடுபேறு பெற வேண்டும் என்று கூறி, இன்று இந்த நிகழ்ச்சிக்கு வந்திருப்பவர்கள் அனை வருக்கும் சிவபெருமான் நிச்சயமாகத் திருவருள் புரிவான் என்று கூறி, இந்த அரிய வாய்ப்பினை நல்கிய அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

வணக்கம்.

* * *

# ஆண்டாள் வளர்த்த அருந்தமிழ் - பாவை விழாவும் அதன் சிறப்பும்

- டாக்டர் வை. பழநிச்சாமி, இ.ஆ.ப.,
தலைவர், தமிழ்நாடு உப்பு நிறுவனம். சென்னை - 600 002.

(ஸ்ரீ வில்லிபுத்தூரில் நடைபெற்ற திருப்பாவை விழாவில் ஆற்றப்பட்ட உரை)

செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!
நைந்தாயெனில், நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந்தானே!

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதற்கிணங்க சங்க காலத்தில் தழைத்தோங்கியிருந்த தமிழ் மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முற்பகுதி வரை தமிழகத்தை ஆண்ட களப்பிரார்களின் இருண்ட ஆட்சியிலும், அதற்குப் பிறகு தொடர்ந்து தமிழகத்தை ஆண்ட பிற மொழியாளர்களின் ஆதிக்கத்தாலும் தமிழ் மொழி, நாகரீகம், பண்பாட்டிற்குச் சிதைவு ஏற்பட்ட அக்கால கட்டத்தில் சைவ, வைணவம் ஆகிய இரு சமயங்களின் நாயன்மார்கள், ஆழ்வார்களால் பாடப்பட்ட பக்தி இலக்கியங்களே தமிழைப் பெரிதும் வளர்த்தது. அத்தகைய செந்தமிழ் மொழியின் சிறப்பினையும் இலக்கிய வளத்தையும் உலகுக்கு எடுத்து இயம்பும் நோக்கத்தில் வி.பி. எம்.எம். கல்வி அறக்கட்டளை நடத்தும் பாவை விழாவில் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

'அரிது அரிது! மானிடராய் பிறத்தல் அரிது'

என்றார் ஔவையார். அத்தகைய மனிதப் பிறவி அவ்வளவு எளிதாக வாய்த்து விடாது.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்மிருகமாகிப் பறவையாய் பாம்பாய்,
கல்லாகி மனிதராய்'

என்று படிப்படியாக பிறவிகள் அமைந்து இறுதியாக மனிதப் பிறவி வாய்க்கும் என்று கூறுகிறார் மாணிக்கவாசகர்.

இப்படி அரிதாக கிடைக்கிற மனிதப் பிறவியை நல்ல வழியிலே நாம் பயன்படுத்த வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில் தான் இது போன்ற திருப்பாவை - திருவெம்பாவை விழாவை வி.பி.எம்.எம். கல்வி அறக்கட்டளை ஆண்டு தோறும் நடத்தி வருவது பாராட்டுக்குரியது.

இறைவன் சில நோக்கங்களுக்காக மண்ணுலகில் தோன்றுகின்றான். இறைவன் அவதாரம் எடுப்பதன் நோக்கம் மண்ணுலக மக்களைத் திருத்தி, அடிமைக் கொள்வதெற்கென்றும், நல்லவர்களை காத்தல், தீயவர்களை அழித்தல் எனவும் சொல்லப் பட்டுள்ளன. இறைவன் எடுத்த அவதாரங்கள் பல.

அவதார நிலையில் பெருமாள் உலகினர்க்கு இணையான திருமேனியோடு தோன்றித் தன்னை வழியாகப் பற்றினோர்களுக்கு இன்பப் பொருளாகவும், மேலான இறையன்புடையோர்க்கு எல்லா வித இன்பமாகவும் இருக்கின்றான். அவ்வாறு இப் பூவுலகில் அவதரித்தவர்தான் ஸ்ரீ ஆண்டாள்.

பழமை வாய்ந்த பெருமை உடைய தமிழகத்தில் வில்லிபுத்தூர் திருத்தலத்தில் திருமகள், தாம் ஆண்டாளாக அவதாரம் செய்ய விழைவதாகக் கூற, மிகப் பழங்காலத்தில் வராகசேத்திரம் என்று புகழப் பெற்ற திருவில்லிபுத்தூர் திருத்தலத்தில் வராக வடிவில் திருமால் இங்குத் திகழ்ந்தபோது, திருமாலும் அதற்கு இசைந்து கருடாழ்வாரை முதலில் பெரியாழ்வாராக இப்புண்ணிய தலத்தில் திரு அவதாரம் செய்யக் கூறினார்.

அவ்வாறு பெரியாழ்வார் அவதாரம் செய்து இங்கு எழுந்தருளியிருக்கும் வடபத்ர சாயி இறைவருக்கு நந்தவனக் கைங்கரியம் செய்யும் பொழுது அந்த அழகிய நந்தவனத்தில், திருத்துழாய்ச் செடியின் அடியில் ஆடிப்பூர நன்னாளில் இவ்வுலகம் உய்ய திரு அவதாரம் புரிந்தவர்தாம், இன்று நாம் விழா கொண்டாடிப் போற்றும் ஆண்டாள் நாச்சியார் ஆவர்.

ஆழ்வார்கள் பன்னிருவரில் பெரியாழ்வார், ஆண்டாள் ஆகிய இருவரும் தந்தையும் மகளுமாகத் திரு அவதாரம் புரிந்த பெருமை மிகுந்த திருத்தலம் இந்த திருவில்லிபுத்தூர் என்பதால்தான் வைணவர்கள் கொண்டாடி மகிழும் திவ்விய தேசங்களில் இந்த வில்லிபுத்தூர் ஒப்பற்ற திருத்தலமாகத் திகழ்ந்து வருகின்றது.

''நற்றமிழால், நூல் செய்து நாட்டை உய்த்த''

ஏனைய ஆழ்வார்களின் அருளிச் செயல்களை விட ஆண்டாளின் அருளிச் செயல்களுக்குத் தனி ஏற்ற முண்டு. எவ்வாறு எனில் மற்ற ஆழ்வார்கள் விஷ்ணு வைச் சித்தத்திலே கொண்டிருக்கின்றனர். விஷ்ணுவோ ஆண்டாளைத் தன் சித்தத்திலே கொண்டிருக்கின்றார்.

''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ கில்லேன்'' என்று எண்ணிய எண்ணத்தினைத் திண் ணிய நெஞ்சமுடன் எடுத்துரைத்துத் திருவரங்கத்து எம்பெருமானுக்கே மணவாட்டியாய் ஆக நினைந்து அதில் வெற்றியும் பெற்ற, சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாகவும், திருப்பாவை பாடியருளிய பாவை யாகவும், கோதில் தமிழ் உரைத்த கோதையாகவும், திருவில்லிபுத்தூர் கோன் எனவும், பட்டர்பிரான் எனவும், பெரியாழ்வார் எனவும் போற்றிடப் பெற்ற ஆழ்வார் தம் அன்பு மகளாகவும் விளங்கித் திகழ்ந்த வர் நம் ஆண்டாள்.

அந்த ஆண்டாளுடைய அருட்பெருமை அளவு கடந்தது. இறைவனுக்கே பணிபூண்ட ஆழ் வார்களில் ஒருவராயும். இறைவனுடைய தேவிமார் களில் ஒருவராயும் இருக்கும் சிறப்பு இவருக்கே உரியது.

ஆழ்வாராய் பாமாலை சூட்டியும், தேவியாய் பூமாலை சூட்டியும் அனுபவித்த தனி அனுபவம் ஆண்டாள் ஒருவருக்கே உடையது.

பூமாலையைத் தாம் அணிந்து பெருமாளுக்கு அணிவித்த ஆழ்வாரும் இல்லை. பாமாலையை சூட்டிய தேவியும் இல்லை.

வைணவத்திற்குத் தமிழ்நாடு தந்த தனிப் பெரும் பரிசு ஸ்ரீ ஆண்டாள். இந்த ஆண்டாள் தமிழுக் குத் தந்த பரிசு திருப்பாவையும், நாச்சியார் திரு மொழியுமாகும்.

ஆண்டாள் நாச்சியார் பக்தியால் தொடுத்த மாலை - நாச்சியார் திருமொழி - நற்றமிழ் மாலை, இறைவனுக்குச் சூட்டப் பெற்ற சங்கத் தமிழ்மாலை. தமிழுக்குக் கிடைத்த அமுத மொழி. பெண்கள் பாடி மகிழ கிடைத்த பாவைப் பாடல்கள்.

திருப்பாவை, ஒரு இசை நூல்: பக்தி நூல்: தத்துவ நூல்: 'மார்கழித் திங்கள்' எனத் தொடங் கும் முதல் பாசுரம் 'நாராயணன்' என்று அழைத்து 'வையத்து வாழ்வீர்காள்' என அழைக்கும் இரண் டாம் பாசுரம் உலகையே பக்தி மார்க்கத்திற்கு அழைக்கும் அழைப்பு விடுத்து, மூன்றாவது பாவைப் பாடல் 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என இறை வனை நமக்காக இரங்கி இறங்கி வந்து அதனால் பயன் பெற அழைக்கும் பாடல். அடுத்து 10 பாடல்கள் பெண்கள் நோன்பு நோற்க அழைத்து எழுப்பும் பாடல்கள் அதையடுத்து 7 பாடல்கள் கண்ணனை எழுப்புவது, அவனோடு உரையாடுவது.

சங்க காலம் முதல் பெண்கள் நாட்டு நலம் வேண்டியும், நல்ல கணவனைப் பெறவும் விடியற் காலையில் கூடி நீராடி அவரவருக்குரிய தெய்வங் களை வழிபடும் மரபு இருந்து வந்துள்ளது.

ஆண்டாளின் நோன்பு மக்களிடம் பக்தி உணர்வை ஊட்டியதுடன் சமூக ஒற்றுமையும் ஏற் படுத்தியுள்ளது.

''மாதங்களில் சிறந்தது மார்கழி'' என்பது கண்ணனின் அமுத வாக்கு. மங்கல மார்கழி மாதத் தில் ''திருப்பாவை' விழா கொண்டாடப்படுவ தற்கு முக்கிய காரணம்.

''பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் - கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு''

என்று திருப்பாவை பயிலாதவர்கள் பூமிக்குப் பாரம் என்று பழித்து உரைக்கின்றார் வேதப்பிரான் பட்டர். எனவே அத்தகைய பழி இந்தப்பகுதி மக்களுக்கு வராமல் காப்பதற்கு வி.பி.எம்.எம். கல்வி அறக் கட்டளை ஆண்டு தோறும் பாவை விழாவைக் கொண்டாடி வருகிறார்கள் என்று எண்ணிப் பார்க் கிறேன்.

வேதத்திற்கே வித்தானது, பரமனடி காட்டு வது ''திருப்பாவை'' ஆகும்.

வேதம் இறைவனது தன்மையை விளக்கு கிறது.

வேதம் இறைவனது அவதாரங்களை விளக்கு கிறது.

வேதம் இறைவனை வழிபடும் வழிமுறை களை விளக்குகின்றது.

வேதத்தையும் விட தெளிவாக, இலகுவாக, எளிமையாக, நளினமாக இறைவனது தன்மையை, இறைவனது அவதாரங்களை, இறைவனை வழிப டும் முறைகளை விளக்குவது திருப்பாவையிலுள்ள 30 பாசுரங்கள் ஆகும்.

ஆகவே தான் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியான கோதைத் தமிழை வேதத்திற்கே வித்து என்று போற்றியுள்ளனர் நம் சான்றோர்கள்.

திருப்பாவையில் ''உலகம்'' என்ற பொது நோக்கு தழைப்பதை நாம் நன்கு உணர முடியும்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற உலகப் பொது நோக்கத்தை வலியுறுத்துவன நம் சங்க இலக்கியங்கள்.

''சங்கத் தமிழ் மாலை'' என்றே சிறப்பிக்கப் பெறும் ஆண்டாள் அருளியுள்ள திருப்பாவையிலும் ''உலகம் ஒன்று'', ''உலகில் வாழும் மக்கள் எல்லாம் ஒன்று'' என்ற பரந்த நோக்கம் வற்புறுத்தப் படுவதை நாம் உணரலாம்.

"பாரோர் புகழப்
படிந்தேலோர் எம்பாவாய்''

என்று பாரை முன்வைத்து முதல் பாட்டிலேயே ஆண்டாள் பாடுகின்றார்.

அடுத்த பாடலையும்
''வையத்து வாழ்வீர்காள்''

என்று தொடங்குகின்றார். அப்பாடல் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மட்டும் பாடப்பட்ட பாடல் அல்ல, அது நம் தமிழகத்திற்கு மட்டும் பாடப்பட்ட பாடலும் அல்ல. நம் பாரத நாட்டிற்கே மட்டும் பாடப் பட்ட பாடல் அல்ல, இது வையத்திற்கே பாடப் பட்ட பாட்டு.

ஆகவே தான் ஆண்டாள்
''வையத்து வாழ்வீர்கள்'' என்று உலகை முன் நிறுத்திப் பாடியுள்ளார்.

"யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ் வையகம்''

என்ற பரந்த சிந்தனையில் பாடப்பெற்ற இலக்கியம் ''திருப்பாவை'' என்பது நாம் உணர்ந்து மகிழத் தக்கது.

"சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின் பால் உய்ப்பது அறிவு''

என்பது திருக்குறள்.

மனத்தை அதன் போக்கில் செல்லவிடாமல் தீமையானவற்றிலிருந்து நீக்கி, நன்மையானவற்றை நாடுமாறு செய்வதே அறிவுடைமையாகும் என்று திருக்குறள் கூறுகின்றது.

அந்தத் திருக்குறள் கருத்தினையே விரிவு படுத்திப் பக்தியோடு கலந்து பாடுகின்றார் ஆண்டாள்.

''பையத் துயின்ற பரமன் அடி பாடி''

என்ற பாடலில்,

செய்யக் கூடாதவற்றைச் செய்யக் கூடாது என்றும், முக்கியமாக புறஞ்சொல்லுதல் கூடாது, கோள் மூட்டுதல் - என்பார்களே அதனைத் ''தீக் குறளை சென்றோதோம்'' என்று ''நல்லனவற்றைச் செய்ய வேண்டும்'' எனவும் ''அல்லனவற்றைச் செய்யக் கூடாது'' எனவும் அறிவுறுத்துகின்றார் ஆண்டாள்.

தினமும் காலையில் நீராட வேண்டும் என்ற தூய்மை உணர்வையும் இப்பாசுரம் வலியுறுத்துகின்றது.

நான்காவது பாசுரத்தில்,
''வாழ உலகினில்பெய்திடாய்'' என்று உலகம் வாழ, மழை வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றது.

கடல் நீரே மேகமாக மாறி மழையாகப் பொழிகின்றது என்பது இன்றைக்கு அறிவியல் தெளிவுபடுத்தும் விஞ்ஞான உண்மை. மெய்ஞ்ஞான நூலாக விளங்கும் திருப்பாவையும், இந்த விஞ்ஞான உண்மையை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ''திருப்பாவை'' நான்காம் பாடலில் விளக்கியிருக்கிற அற்புதத்தைக் காணுகிறோம்.

அந்த விஞ்ஞான உண்மையை - இன்றைக்கு விஞ்ஞானிகள், தாங்கள் கண்டுபிடித்ததாகப் பெருமை பேசிக் கொள்கின்ற அந்த உண்மையை, மெய்ஞ்ஞானியாகிய மங்கையர் திலகம் நம் ஆண்டாள் அவர்கள் ''ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி'' என்று அழகாகப் பாடியிருப்பதை இப்பாசுரத்தில் நாம் கண்டு மகிழ்கின்றோம்.

மழையின்றி இந்த உலகம் இல்லை என்பது தெளிவு. அத்தகைய மழையின் சிறப்பினைப் போற்றியே, கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடியாக ''வான்சிறப்பு'' என்று தலைப்பிட்டு வான்மழையின் சிறப்பைப் பாடியுள்ளார் திருவள்ளுவர்.

அத்தகைய மழையைப் பொழிய வேண்டி, மார்கழி நோன்பு இருக்கும் பாவையர்கள் இறைவனை வேண்டுகிறார்கள்.

"தீங்கின்றி உலகெலாம் வாழ வேண்டும்''
''தீங்கின்ற நாடெல்லாம் வாழ வேண்டும்''

என்பது தான் திருப்பாவை வழியாக ஆண்டாள் வற்புறுத்தும் உண்மை.

இத்தகைய பொது நோக்கம் - ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'' என்ற அருள் நோக்கம் திருப்பாவையில் வலியுறுத்தப்படுவதால் தான் இன்று கடல் கடந்த நாடுகளில் எல்லாம் ''திருப்பாவை'' முழங்கக் காண்கின்றோம்.

கடல் கடந்த சியாம் தேசத்தில் திருப்பாவை விழாவும், திருவெம்பாவை விழாவும் பற்பல நூற்றாண்டுகளாக இம்மார்கழி மாதத்தில் கொண்டாடப் பட்டு வருவதைக் கொண்டு, இதன் சிறப்பை நாம் நன்கு உணரலாம்.

கிருஷ்ண தேவராயர் திருப்பாவையைத் தெலுங்கில் மொழி பெயர்த்து ''ஆமுக்த மால்யகதா'' எனும் பெயரில் பாடியுள்ளதாக அறிகிறோம்.

இன்று அமெரிக்காவில் பிட்ஸ்பர்க் நகரிலுள்ள வெங்கடேசப் பெருமாள் ஆலயத்திலும் பிறபிற வைணவ ஆலயங்களிலும் மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவை பாடல்களே முழங்கி வருகின்றன.

ஹரேராம ஹரே கிருஷ்ண இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பாவை மாநாடுகளை நிகழ்த்தித் திருப்பாவையின் சிறப்பை உலகறியச் செய்து வருவதும் இங்கு நாம் நினைந்து மகிழத்தக்கது.

இன்றைக்கு உலகெங்கும் திருப்பாவையின் வாயிலாகத் தமிழ் மொழியின் ஏற்றம் உணரப் பட்டுப் போற்றப்பட்டு வருகின்றது.

''தேயமெல்லாம் தமிழ் முழக்கம் தழைக்கச் செய்வோம்'' என்று மகாகவி பாரதியார் பாடியுள்ள கூற்று திருப்பாவையின் வாயிலாக நிறைவேறி வருகின்றது.

''அன்றிவ் வுலகம் அளந்தாய் அடி போற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி

என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் அருச்சனைக்கு வித்திட்ட பெருமை ஆண்டாளுக்கு உண்டு.

அவர் அருளியுள்ள திருப்பாவையின் வாயிலாக உலகெங்கும் இன்று திருக்கோயில்களில் தமிழ் அர்ச்சனை முழங்குகின்றது என்ற கூறி நாம் பெருமை கொள்ளலாம்.

திருமால், தமிழ் முழங்காத இடத்தில் யான் இருக்க மாட்டேன் என்று ''பைந்நாகப்பாய்ச் சுருட்டிக்'' கொண்டதாக வரலாறு இருக்கின்றது.

ஆகவே தான்

''பைந்தமிழ்ப் பின் சென்ற
பச்சைப் பசுங் கொண்டல்''

என்று திருமாலை, சைவ சமயம் சார்ந்த குமர குருபரரும் பாடியிருக்கக் காணுகின்றோம்.

ஆகவே திருப்பாவையைப் பயின்றால் மிகச் சிறந்த தமிழ் உணர்வு உண்டாகும். அந்தத் தமிழ் உணர்வோடு தெய்வீகப் பக்தி உணர்வு வளரும், பக்தி வளர்ந்தால் நம்முடைய வாழ்க்கை பண்பட்ட வாழ்க்கையாக அமையும். பண்பட்ட வாழ்க்கை அமையுமானால் நமக்கெல்லாம் வைகுந்த வாழ்வும் அமையும்.

இதனைத் தான் திருப்பாவை நமக்கு உணர்த்துகின்றது; இந்த உலகிற்கு உணர்த்துகின்றது.

திருப்பாவை பாடி ஸ்ரீவில்லிப்புத்தூரை ஆயர்ப்பாடியாக மாற்றிவிட்ட ஆண்டாள், அந்த அரங்கனையே திருமணம் செய்வேன் என்று விரதம் பூண்டாள்.

''வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரணப் பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான்''

என்று அரங்கனை அடைய கனவு கண்டு, அரங்கனையே அடையும் பேறு பெற்றவர் ஆண்டாள்.



அத்தகைய ஆண்டாள் திருவடிகளைச் சரணம் எனக் கொண்டால், பீடுமிக்க மார்கழியில் விரதம் இருந்தால், தையிலே வாழ்வு பிறக்கும், அதனால் தான் ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்று பழமொழி வழங்குகின்றது.

''திரு ஆடிப் பூரத்தில் செகத்து உதித்தாள் வாழியே!
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே!
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே!
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின் ஆனாள் வாழியே!
ஒரு நூற்று நாற்பத்து மூன்று உரைத்தாள் வாழியே!
உயர் அரங்கர்க்கே கண்ணி உகந்து அளித்தாள் வாழியே!
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே!
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே!''

என்று ஆண்டாள் திருவடிகளை வாழ்த்தி, இவ்வினிய விழாவில் பங்கேற்க வாய்ப்பு நல்கிய விழாக் குழுவினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, நம் தமிழர்கள் எத்தகைய குணம் உடையவர்கள்; அவர்களில், குறிப்பாக பெண்களின் தற்போதைய நிலை என்னவென்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழர்கள் அனைத்துத் துறைகளிலும், தற்போது தலை நிமிரத் தொடங்கியுள்ளனர்.

தாழ்வு மனப்பான்மை, இயலாத்தனம், கால அருமை அறியாமை, உணர்ச்சி வசப்படுதல், வறுமையில் வாடுதல், தொலை நோக்கின்மை, சிரமங்களைச் சுமக்காமல் சிகரங்களைத் தொடும் விருப்பம், ஒற்றுமையின்மை, தட்டிக் கேட்கத் தயக்கம், தன்னம்பிக்கையின்மை ஆகியவற்றின் கொள்கலனாய்த் தமிழர்கள் இருந்த நிலையிலிருந்து விடுபட்டு புத்தாயிரம் ஆண்டில் தமிழர்கள் புதுவாழ்வு பெறுவதற்கு இது போன்ற விழாக்கள் பயன்படும்.

தமிழன் பலவீனங்கள் மட்டுமின்றி பலமும் உடையவன். எத்தனை முறை வீழ்ந்தாலும் எழுவான். உலகம் வியக்க எழுந்து நிற்பான். தமிழனுக்கு இரக்கவுணர்வு அதிகம். சில நேரம் அதுவே அவனைத் தாழ்த்தி இருக்கிறது. அதனை உணர்ந்து தமிழன் விழிப்படையும் போது தலைகீழ் மாற்றங்களை நடத்திக் காட்டியிருக்கின்றான். மேலும் வியத்தகு சாதனைகள் படைக்க குறிப்பாக ஆண் பெண் இருபாலாரில் சரிபாதியாகத் திகழும் பெண்கள் நிறைந்த இக் கல்லூரியில் பயிலும் நீங்கள் அனைவரும் விழிப்படைந்து அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்து வெற்றி பெற வாழ்த்தி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

★★★

# கந்தரனுபூதி

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

பொதுவாகவே நாட்டில் ஒருவருக்கு வாழ்க்கையில் மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் நான்கும் துணையாக அமைவது இயல்பு, அடியேன் என் மாதா, பிதாவை குருவாக ஏற்றதன் பயனே, வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகளை பரமகுருவாக ஏற்கும் பாக்கியம் பெற்றேன். இம்மூவரது கருணையால் பிரபஞ்சம் என்னும் சேற்றிலிருந்து கரையேற,


''கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே''

எனும் அப்பரது வாக்கினிற்கு ஏற்ப, அருணகிரியார் அருளிச்செய்த கந்தரனுபூதி பாடல்களே தெப்பமாக அடியேனுக்கு உதவியது. அடியேன் முதுமையால் உடலால் வலிமைகுன்றியபோதிலும், உள்ளத்தால் உறுதி குன்றாது, கந்தரனுபூதி பாடல்களை ஊன்றி படிக்கலானேன். கந்தரனுபூதியில் உள்ள பாடல்கள் அனைத்தையும் அறிவதைவிட முக்கியமான சில பாடல்களை அறிந்தாலே போதுமான மனநிறைவு ஏற்படும் எனக்கருதியே இறைவனின் துணைக்கொண்டு எழுத முற்படுகிறேன்.

அருணகிரிநாதர் அருணையில் முருகப் பெருமானால் தடுத்துதாட் கொள்ளப்பட்டு திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தரனுபூதி, போன்றவைகளை பாடிப் பிறகு கிளியாய் இருந்து திருவகுப்பு என்ற கவியை இயற்றும் அருளைப் பெற்றவர் ஆவார். அறிவிற்கும் அப்பால் அருணகிரியார் இறைவனது திருவருள் திறத்திலே அனுபவம் செறிந்தவராக விளங்கினார். ஒருவருக்கு நீதிகளை பலர் உரைப்பர், நண்பர்களானால் அதையே உரிமையோடு உரைக்கும் முறை வேறு. ஆசிரியரானால் விளங்கவைக்கும் முறை வேறு. ஆனால் காதலி தன் காதலனுக்கு நீதிகளை எடுத்துக்கூறினால் எப்படி இருக்குமோ அந்த முறையிலேதான் இன்பமும், நயமும் கொண்டு கசப்போ, வெறுப்போ இல்லாது பாடியுள்ளதை அனுபூதி பாடல்களில் காணலாம். அனுபூதி பாடல்களில் உள்ள கருத்துக்களை படிக்கும்பொழுது அவர்களையே அறியாமல் உயரிய இறை தத்துவங்களை உணர்ந்துக்கொள்ள இயலும். காதலி காதலனுக்குக் கூறுவது போல், சுவையும், பக்தியும் பொருந்திய கருத்துக்களை அருணகிரியார் பாடியிருப்பதை கந்தரனுபூதியில் பரக்கக்காணலாம். கந்தப்பிரான் செய்த உபதேசச் சிறப்பையும் அவனது திருவருள் பிரசாதத்தின் பெருமையும் பேசும் நூலாதலின் இந்நூலுக்கு கந்தரனுபூதி எனப் பெயர் போந்தது. (அனுபூதி - அருட்பிரசாதம்) முருகப்பிரான் திருவடி தீட்சை செய்து, மௌன உபதேசம் செய்த பிறகே கந்தரனுபூதி எனும் இந்நூலை ஆசிரியர் இயற்றினார் என்பது ஆன்றோர்கள் கருத்து.

அருணகிரியார் தமது குறைகளை எடுத்துக் கூறியும், தாம் தவநிலையில் பெற்ற பேற்றினை எடுத்து ஓதியும், தாம் அடைந்த மௌன நிலையின் பெருஞ்சிறப்பை எடுத்துக் கூறியும், தான் பெற்ற இன்பத்தை மக்கள் யாவரும் பெற்று உய்யுங்கள் என உபதேசித்தும் அருளிச் செய்த நூலே கந்தரனுபூதியாகும். இந்நூலுக்கு உயிர்நிலைப்பாக்கள் ''ஆடும் பரி'' ''கெடுவாய்மனனே'' என துவங்கும் பாடல்களேயாம்.

அருணகிரியாரின் கந்தர் - அனுபூதி பாடல்களையும், பிற அனுபூதிமான்கள் அருளிய பாடல்களையும் பார்த்ததில் அனுபூதிமான்களுக்குள்ளே வேறுபாடு தோன்றாது போனாலும், அந்த அனுபவத்தை சொல்லுகின்ற முறையிலே வேறுபாடு இருந்தது. பொதுவாக எம்.ஏ., பட்டம் பெற்றவர்கள் யாவரும் ஒரே மாதிரியாகவா மாணவர்களுக்கு சொல்லித் தருகிறார்கள்? அதனால் அவர்கள் பெற்ற கல்வி பட்டத்திலே குறைவு இல்லை. நன்றாக கற்றுத் தேர்ந்தவர்களேயாவர், படித்தவற்றை சொல்லித் தருவதிலேதான் வேறுபாடு உள்ளதை அறியலாம். அதைப்போன்றே அனுபூதிமான்களுக்குள்ளே, நல்ல உயர்ந்த அனுபவத்தை உலக மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்ற கருணை உள்ளம் இருந்த போதிலும் அதை நிறைவேற்றினவர்கள் மிகச்சிலரே யாவர். அத்தகைய சிலருள் உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கப்படுவரே அருணகிரிநாதர். ஒருவன் குக்கிராமத்தில் இருந்து பட்டணம் சென்று திரும்பி வந்ததும், தான் கண்டதை சொல்ல நினைக்கிறான். அங்கே வீடுகள் இருந்தன, வீதிகள் இருந்தன, மனிதர்கள் கூட்டம் கூட்டமாக சென்று கொண்டிருக்கிறார்கள் என்றா சொல்வான், அதற்கு மாறாக அந்த ஊரிலே எவ்வளவு உயர்ந்த கோபுரங்களைக் கொண்ட



ஆலயங்களையும், மாடி கட்டிடங்களையும், வீதிகளில் செல்லும் வாகனங்களையும், நகை ஆபரணங்கள் கடைகளைப் பற்றியும் தன் கிராமத்தில் காணாததை அல்லவா சொல்லுவான்! அதுபோன்றே நாம் எத்தனையோ நூல்களைப் படித்திருந்தாலும் கந்தர் - அனுபூதியை படிக்கும்பொழுது, ஏனையோர் பாடிய பாடல்களில் உள்ள அரிய கருத்துக்களை படித்து அறிந்த போதிலும், அவற்றைப் பெரியனவாக பாராட்டாது, இக்கந்தரனுபூதியில் மட்டும் காணப்படுகின்ற அனுபவ துளிகளாகிய பாடல்களை காணலாம். இத்தகை உயர்ந்த பாடல்களை கொண்ட நூல் வேறு எங்கு உண்டு? என விம்மிதம் அடைவோம், அப்படி இன்றைய நாளில் விம்மிதம் அடைகிறோமோ, இல்லையோ? பெரியவர்கள் அப்படி விம்மிதம் அடைந்தார்கள். உதாரணத்திற்கு பெரியவர்களுக்குள்ளே அனுபவசாலியும், இறைவனுடைய அருள் பெற்ற தவச்சீலருமாகிய தாயுமானவர் அப்படி விம்மிதம் அடைந்தார், அதை குறித்து அவர் பாடிய பாடல் ''ஐயா, அருணகிரியப்பா, உனைப்போல் மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?'' என்பதாகும். இறைவனுடைய திருவருள் அனுபவம் பெற்ற அருணகிரியார் அந்த மாபெரும் அழியா அருட்பிரசாதத்தை எளிதில் நாமெல்லாம் பயனடையும்படி பாடி அருளிப் போந்துள்ளார், அருணகிரிநாதர் உலகமக்களின் பொருட்டு மக்கள் செய்யும் குற்றங்களை தாமே செய்தது போல் இறைவனிடம் முறையிட்டுள்ளார், அதற்குப் பரிகாரமும் சொல்லியுள்ளார். இவர்கள் எல்லாம் வக்காளத்து பெறாத வழக்கறிஞர்கள் ஆவார்கள், பக்திமான்கள் உள்ளத்தில் கந்தரனுபூதி பாடல்கள் அழுத்தமாக பதியவே முருகனது திருக்கரத்திலே இருந்து அவன் சொன்னதைச் சொன்ன கிளியே அருணகிரியாவார் எனச் சொல்லி மனதை ஒரு நிலைப்படுத்தவே ஆராய்ச்சியாளர்கள் கற்பனை செய்து அல்லது மனதில் தோன்றியதைக் கூறி இருக்கலாமல்லவா?

*(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)*

★★★

# திருநீறும் பெண்களும்

- முனைவர் டி. செல்வராஜ்

### திரு வெண்ணீற்றுமை

''திரு நல்லூர்ப்பெருமணம்'' என்ற சிவத் தலத்தின் இறைவன் - சிவலோகத்தியாகர். இறைவி - திருவெண்ணீற்றுமை.

"மேகத்த கண்டன்; எண் தோளன்; வெண் ணீற்றுமை பாகத்தன்"......

என்பது திருஞான சம்பந்த சுவாமிகளின் அருள் மழலை வாக்கு. (திருநல்லூர்ப் பெருமணம்; பதிகம் பாடல் 7)

''இறைவன் காளமேகத்தைப் போன்ற கரிய கண்டத்தை உடையவன்; எட்டுத் தோள்களைக் கொண்டவன்; வெண்ணீற்றுமையைத்தன் உடம் பின் ஒரு பாகத்தில் ஏற்றவன்....

இறைவியின் திருப்பெயர் உற்று நோக்கத் தக்கது. நெற்றியில் வெண்ணீற்றைப் புனைந்தவள் வெண்ணீற்றுமை.

உமையம்மனும், சைவச்சார்புடைய துர்க்கை, மாரியம்மன் முதலிய பெண் தெய்வங்கள் பலரும் நெற்றியில் திருநீற்றையும், குங்குமத்தையும் புனைந்த வர்களே.

பெண் தெய்வங்களின் நெற்றியில் திருநீறு பொலிவதால், ஆண்களுக்கு மட்டுமல்லாமல் பெண் களுக்கும் உரியது - பெண்களும் புனையத்தக்கது / புனைய வேண்டியது - திருநீறு என்பது தெளிவு.

### திருநீறும் பெண்களும்

திருநீறு என்பது சைவ சமயத்திற்குரிய சிவ சின்னங்கள் மூன்றில் ஒன்று. உருத்திராக்கமும், ''நம சிவாய'' என்ற ஐந்தெழுத்து மந்திரமும், மற்ற இரண்டு சிவ சின்னங்களாம்.

### இடங்கள்

திருநீற்றை ஆண்கள் உடம்பின் பதினாறு உறுப்புகளில் தரிக்க வேண்டும் என்ற விதிமுறை உள்ளது. அவை 1. தலையுச்சி 2. நெற்றி 3. மார்பு 4. கொப்பூழ் 5, 6. முழந்தாள்கள் இரண்டு 7, 8. தோள் கள் இரண்டு 9, 10. முழங்கைகள் இரண்டு 11, 12. மணிக் கட்டுகள் இரண்டு 13, 14. விலாப்புறம் இரண்டு 15. முதுகு 16. கழுத்து. என்பன.

திருநீறு என்பது ஒரு மருந்து. இதன் மருத்துவ ஆற்றல்கள் உடம்பில் ஊற வேண்டும், ஏற வேண்டும் என்பதற்காகப் பதினாறு உறுப்புகளில் அதைப்புனைய வேண்டும் என்பது விதி.

தவசிகள், துறவிகள், மடாதிபதிகள், சமயச் சான்றோர்கள் முதலியோர் மேற் கண்ட விதிமுறையை நெகிழாமல் பின்பற்றக் கூடியவர்கள். மற்றவர் களோ, விரைந்தோடும் காலச் சூழ்நிலைக்குத்தகுந்த படி நெற்றியில் மட்டும் திருநீற்றைப் புனைந்து மனநிறைவு பெறுகின்றனர்.

பெண்கள் நெற்றியில் மட்டும் திருநீற்றைத் தரித்தாலே போதும். அதைப்பதினாறு உறுப்புக ளில் தரிக்க வேண்டும் என்ற விதி இவர்களுக்குப் பொருந்தாது; இவ்வாறு தரிக்கவும் முடியாது.

### முறைகள்


சைவர்கள் நெற்றியில் திருநீற்றைத் தரிக்கின்ற முறைகள் இரண்டு.

1) உத்தூளனம் : மூன்று வரியின்றித் திரு நீற்றைப் பட்டையாகத்தரிப்பது உத்தூளனம் (உத் தூளம்; உத்தூளி)

2) திரிபுண்டரம் : மூன்று வரிப்பட்டை களாகத் திருநீற்றைத் தரிப்பது திரிபுண்டரம்.

சிவ தீட்சை பெற்றவர்கள் திருநீற்றை நீரில் குழைத்தும், மற்றவர்கள் குழைக்காமலும் தரிக்க வேண்டும். இவை இரண்டும் பழைய முறைகள்.

3) ஒரு பட்டை அல்லது சிறு பட்டைத் திருநீறு: இப்போது பலர் திருநீற்றை நீண்ட ஒரு பட்டையாக நெற்றியில் தரிக்கின்றனர். அல்லது, மிகப்பலர் ஒரு சிறு பட்டையாக நெற்றியின் நடு வில் புனைகின்றனர். இவை இரண்டும் அண்மைக் காலத்தில் தோன்றிய மூன்றாம் முறைப் புனைவாகும்;



இப்போது மிக அதிகமாக இவை நடைமுறையில் உள்ளன.

ஒரு பட்டை அல்லது சிறுபட்டைத் திருநீற்றை இருபாலாரும் புனைவது தவறு. இவை முறையற்ற முறைகள். இவ்வாறு புனைவதால், திருநீற்றால் உடம்புக்குக் கிடைக்கின்ற மருத்துவப் பயன்களை வீணே இழந்துவிடுகின்றனர்.

ஒரு பட்டைத் திருநீற்றை ஆண்களும், சிறுபட்டைத்திருநீற்றை இருபாலாரும் புனைகின்றனர்.

சைவ சமய அடையாளச் சிவ சின்னத்தை ஓர் அலங்காரப் பொருளைப் போல இப்போது பயன்படுத்துகின்றார்கள் என்பது வருந்தத்தக்க ஓர் உண்மை.

காலப் போக்கில் ''சிறுபட்டைத் திருநீறு'' எப்படியோ இப்போது வழக்காற்றில் நுழைந்து விட்டது. உத்தூளனமாக, திரிபுண்டரமாகத் திருநீற்றைப் புனைபவர்களை விடச் ''சிறு பட்டைத் திருநீற்றை'' அலங்காரமாக அணிகின்றவர்களே அதிகம் எனலாம்.

பூசையறையில், இறைவனின் திருமுன் புனைய வேண்டியது திருநீறு; என்றும் புனிதமானது. ஆனால், கண்ணாடியின் முன் நின்று தம் முகங்களைத் தாமே ''தரிசித்துக் கொண்டு'' நெற்றியில் திருநீற்றை அணிகின்றனர். இது இப்போது அழகானது; நெற்றியின் ஓர் அலங்காரப் பொருள்.

இனி, பெண்கள் பல பருவங்களில் திருநீற்றைப் புனைகின்ற முறைகளைக் காணலாம்.

***1) பெண் குழந்தைகள் :*** பெண் குழந்தைகளின் நெற்றியில் சிறுபட்டைத் திருநீற்றை ஒரு காப்பாக அணிவிக்கின்றனர்.

***2) கன்னிகள் :*** கன்னிப்பெண்கள் சாந்துப் பொட்டின் மேலே அல்லது கீழே சிறுபட்டைத் திருநீற்றைப் புனைகின்றனர்.

***3) இளைய இல்லறப்பெண்கள் :*** இவர்கள் குங்குமப் பொட்டின் மேலே அல்லது கீழே சிறு பட்டைத் திருநீற்றைத் தரிக்கின்றனர். திருநீறு = சிவம்; குங்குமம் = சக்தி.

*4) முதிய இல்லறப்பெண்கள் :* ஏறக்குறைய நாற்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட - ஒரு துறவியைப்போல வாழ்கின்ற முதிய இல்லறப்பெண்கள் முகம் முழுவதும் மஞ்சளைப்பூசி, நெற்றியில் உத்தூளனமாகத் திருநீற்றைப் புனைந்து, நடுவில் குங்குமப் பொட்டைக் கச்சிதமாக அணிகின்றனர். பொன்மை - வெண்மை - செம்மை என்ற மூன்று வண்ணங்களால் அவர்களது முகம், இயல்பை விடமும்மடங்கு பொலிகின்றது.

மங்கலச் சின்னம் மஞ்சள்; சிவ சின்னம் திருநீறு; சக்தி சின்னம் குங்குமம். இல்லறப் பெண் துறவிகளின் முகங்களில் இவை அற்புதச் சங்கமம்; தெய்வீகப் பொலிவு.

*5) விதவைகள் :* இவர்கள் உத்தூளனமாகவோ சிறுபட்டையாகவோ திருநீற்றைப் புனைகின்றனர். இவர்களது சலனமற்ற உள்ளத்தின் தூய்மை, நெற்றியில் புலனாகின்றது.

குறிப்பாக, திருநீற்றை மட்டும் புனைவது, விதவைத் தன்மையின் அடையாளச் சின்னம் என்று சிலர் அடிமனத்தில் நினைப்பது உண்டு.

இவ்வாறு பெண்கள் தம் பருவநிலைகளுக்குத் தகுந்தபடி திருநீற்றைப் புனைகின்றனர் எனலாம்.

**திருநீறு அணிதலும், அளித்தலும்**

பெண்கள், திருநீற்றை அணிந்தனர் என்பதற்கும், பிறர் அணிவதற்காக அளித்தனர் என்பதற்கும் பெரிய புராணத்தில் சான்றுகள் உள்ளன. ஒரு சான்றை விரிவாகக் காணலாம்.

புகழனார்க்கும், மாதினியாருக்கும் மகள் திலகவதியார்; மகன் மருள் நீக்கியார். (திருநாவுக்கரசர்).

திலகவதியார் மணப்பருவம் எய்திய போது, இவருக்கும் படைவீரர் கலிப்பகையாருக்கும் திருமணம் புரியப்பெற்றோர் இசைந்தனர். ஊழ்வினை கொடியது. பெற்றோர் மடிந்தனர். கலிப்பகையாரும் வடபுலப் போர்க்களத்தில் உயிர் நீத்தனர்.

திலகவதியார், ''கலிப்பகையாரே தம் கணவர்'' என்ற உறுதியுடன் இருந்ததால், அம்மையாரும் உடனே உயிர்த்துறக்க முனைந்தார். தம் தம்பியின் வேண்டுகோளின்படி, தம் தம்பிக்காக, ஒரு துறவியைப்போல வாழ்ந்து வரலானார். அப்போது அவர் சிவ சின்னமான திருநீற்றைப் புனைந்திருந்தார். (பெரிய புராணம்; திருநாவுக்கரசர் புராணம்; பாடல் 43)

சமண சமயத்தைச் சார்ந்த திருநாவுக்கரசர் பின்னர்ச் சூலை நோயால் மிகவும் வாடினார். முடிவில், தம் தமக்கையார் திலகவதியாரைத்தரிசித்துத் துயர் தீரத்திருவதிகைக்கு வந்தார். அம்மையாரும் ''திருக்கயிலைக் குன்றுடையார் திருநீற்றை ஐந்தெழுத்தோதிக் கொடுத்தார்.'' (பெரிய புராணம்; திருநாவுக்கரசர் புராணம்; பாடல் 66) அவர் அதைப் பணிந்து ஏற்றுத்திருமேனி முழுவதும் பூசினார். இறைவனது அருளால் அவரை விட்டுச் சூலை நோய் விலகிற்று. அவரும் சமண சமயத்தை விட்டு விலகிச் சைவ சமயத்தைச் சார்ந்தார்.

திலகவதியாரின் வரலாற்று நிகழ்ச்சிகளால், பெண்கள் திருநீற்றைத் தாமும் அணிந்தனர், பிறரும் அணிவதற்காக அளித்தனர் என்பன தெளிவாகத் தெரிகின்றன.

**காவல் தெய்வம்**

''தெய்வவெண் திருநீறு சிறக்கவே'' என்பது பெரியபுராண வாழ்த்துச்செய்யுள்.

திருநீறு தெய்வத்தன்மையுடையது. இதற்கும் மேலாகத் திருநீறே ஒரு தெய்வம்.

திரு நீற்றைத் தொகுத்து வைத்திருக்கின்ற பையைத் ''திரு நீற்றுக் கோயில்'' என்பர். பை - ஒரு கோயில் என்றால், அதில் 'எழுந்தருளியுள்ள' திருநீறு ஒரு தெய்வம் என்பது தானே புலனாகின்றது.

மேலும், திருநீற்றை ஒரு தெய்வ நிலைக்கு மிகவும் உயர்த்தியவர் ஸ்ரீ சிதம்பர சுவாமிகள். ''புகழ் வெண்திருநீறே வடிவேலரசை மயிலரசை வந்து புறங்காத்திடும்'' என்று திருப் போரூர்ச்சந்நிதி முறை - பிள்ளைத் தமிழ் - காப்புப் பருவத்தில் சுவாமிகள் அருளினார்கள். (பாடல் 5) குழந்தை முருகனைத் திருநீறே காத்தருளுமாம்! அது தெய்வமாம்!

எனவே, திருநீறே உடலுக்கும், உள்ளத்திற்கும், உயிருக்கும் ஒரு 'காவல் தெய்வம்'. அத்திருநீற்றை முறைப்படி புனைந்து, அது அருளுகின்ற நற்பயன்களை அனைவரும் அளவில்லாமல் பெற வேண்டும்.

★★★

# பட்டினத்தாரும் பத்திரகிரியாரும்

பைம்பொழில் **கே. பாலசுப்பிரமணியன்,** எம்.ஏ., எம்.பில்., பி.எட்.

சோழ நாட்டின் நடுநாயகமாக விளங்கும் தலம் திருவிடைமருதூர். அகத்தியர், உரோமேசர் போன்ற முனிவர்களும், மாந்தாதா, வரகுணர் போன்ற அரசர்களும் இங்கே வழிபட்டு பேறுபெற்றனர். ஆயினும் பட்டினத்தாரும், பத்திரகிரியாரும் இத்தலத்தில் பேறு பெற்றதோடு நீங்கா இடமும் பெற்று விட்டனர்.

அவர்களுள் பட்டினத்தார் வரலாறு மிகவும் சுவையானது. காவிரிப் பூம்பட்டினத்தில், வணிக குலத்தில் சிவநேசருக்கும், ஞானகலை அம்மைக்கும், திருவெண்காட்டு இறைவன் திருவருளால், ஓர் ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தை திருவெண்காடர் என்ற பெயருடன் வளர்ந்தது. இளமையிலேயே முன்பு செய் தவத்தின் ஈட்டத்தால், சிவஞானச்செல்வம் மிகுந்து விளங்கியது. சிவகலையம்மையை திருவெண்காடர் மணந்து கொண்டார். காவிரிப் பூம்பட்டினத்தில் வாணிபத்தில் சிறந்து விளங்கிய திருவெண்காடரை 'பட்டினத்துச் செட்டியார்' என்று எல்லோரும் போற்றினர். ஆனால் பட்டினத்துச் செட்டியாருக்கோ, நெடுங்காலம் புத்திரப்பேறு இல்லாத பெருங்குறை இருந்து வந்தது. ஆட்கொண்டருளும் திருவிடைமருதன் தானே ஒரு குழந்தை வடிவில் திருக்கோயில் அருகில் உள்ள வில்வ மரத்தடியில் கிடக்க இறைவன் ஆணைப்படி, சிவசர்மர் என்னும் கோயில் குருக்கள் அக்குழந்தையை பட்டினத்துச் செட்டியாரிடம் சேர்ப்பிக்க, அவரும் அதனை பெருமகிழ்வுடன் ஏற்று வளர்த்து வந்தார்.

அக்குழந்தை மருதவாணன் என்னும் திருநாமத்துடன் சகல கலைகளிலும் வல்லதாய் வளர்ந்து வரலாயிற்று. வாணிகக் கலையிலும் தேர்ச்சி பெற்ற மருதவாணன் கடல் கடந்து சென்று எரு மூடையையும், அவல் கடலையையும் கொணர்ந்தார். வியப்படைந்த திருவெண்காடர் எரு மூட்டையின் நடுவே மாணிக்கக் கற்களும், அவல்கடலைகளுடன் பொன் மணல்களும் கலந்திருப்பதைக் கண்டு, தமது அருமை திருக்குமாரைத் தழுவி முத்தமிடக் கிட்டினார். ஆனால், மருதவாணர் மறைந்துவிட்டார்.

திடுக்கிட்ட திருவெண்காடர் மருதவாணனின் பிரிவாற்றாது வாடினார். அப்பொழுது அவர் மனைவியார் ஒரு சிறு பெட்டி ஒன்றினை புதல்வர் தந்ததாக கணவரிடம் கொடுத்தார். அப்பெட்டியை திறந்து பார்த்த திருவெண்காடர் அதன் உள்ளே காதற்ற ஊசி ஒன்றும், ஓலை நறுக்கு ஒன்றும் இருப்பதைக் கண்டார். அந்த ஓலை நறுக்கில், ''காதற்ற ஊசியும் வாராதுகாண் கடை வழிக்கே.'' என்று எழுதப்பட்டிருந்தது. பரிபக்குவம் அடைந்த பட்டினத்துச் செட்டியார் உடனே 'பட்டினத்தடிகள்' ஆனார். அவரது தனித் துறவின் உண்மை நிலையானது

மாடுண்டு கன்றுண்டு மக்கள் உண்டு
என்று மகிழ்வதெலாம்
கேடுண்டெனும்படி கேட்டு விட்
டோம் இனிக்கேள் மனமே
ஓடுண்டு கந்தையுண்டுஉள்ளே
எழுத்தைந்தும் ஓத உண்டு
தோடுண்ட கண்டன்அடியார்
நமக்குத் துணையும் உண்டே''

அவர் பாடிய பாக்களால் புலப்படும்.

பித்தனைப் போன்று திரியத் தலைப்பட்ட பட்டினத்தடிகளது உயர்நிலையை அறியாத அவரது தமக்கையார், தமக்கு மானக்கேடு வந்தது என்று எண்ணி நஞ்சு கலந்த அப்பத்தைப் பட்டினத்தாருக்குக் கொடுக்க, அதையறிந்த பட்டினத்தார்,

''தன்வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும்'' என்று கூறித் தமக்கையின் வீட்டு கூரைமேல் எறிய அவ்வீடும் பிறவும் எரியத் தொடங்கின.

''தங்களைக் கேட்டு பிறந்திலம்'' என்றொரு பாடலைப் பாடி தீயை அணைத்தார்.

தம் தாயின் ஈமக் கடன்களைச் செய்துவிட்டு அப்பொழுதுதான் ''தெய்வத்தாமரை செவ்விதின் மலர்ந்து'' எனத் தொடங்கும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையை பாடி அருளினார்.

பிறகு தல யாத்திரையை மேற்கொண்ட பட்டினத்தடிகள் உஜ்ஜயினி நகரை அடைந்தார். அந்நகர் புறத்து அமைந்த ஒரு பிள்ளையார் கோயிலில் தியானம் செய்து கொண்டிருந்தார். அப்போது அந்நகர மன்னனது வீட்டில் களவாடி, அவ்வழியே சென்ற கள்வர் தமது விருப்பம் நிறைவேற்றியமைக்கு மகிழ்ந்து ஒரு மணி மாலையை அப்பிள்ளை

## அணிகலன்கள்

நாவிற்கு அணிகலன் ''நமசிவாய.''

கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம்.

காதுக்கு அணிகலன் நல்ல கேள்வி.

கரத்திற்கு அணிகலன் தானதருமம்.

மனத்திற்கு அணிகலன் தியானம்.

யார் மீது வீசி எறிய, அது பட்டினத்தடிகள் கழுத்தில் விழுந்தது. கள்வரைத் தேடி வந்த காவலர், மணி மாலையுடன் இருந்த பட்டினத்தடிகளைக் கண்டு அவரைத் திருடன் என்று எண்ணி அரசனிடம் கொண்டு சென்றனர். அரசனும் ஆராயாமல் அடிகளை கழுவில் ஏற்ற ஆணையிட்டான். கழுமரத்தின் பக்கத்தில் சென்ற பட்டினத்தார்,

''என் செயலாவது யாதொன்றும்
இல்லைஇனித் தெய்வமே
உன் செயலே என்றுரைப் பெற்
றேன்இந்த ஊன் எடுத்த
பின் செய்த தீவினை யாதொன்று
மில்லை பிறப்பதற்குப்
முன் செய்த தீவினையே இங்ங
னேவந்து மூண்டதுவே''

என்று இறைவனை வேண்ட அக்கழுமரம் தீப்பற்றிச் சாம்பலாயிற்று. அரசன் அதனைக் கண்டு அஞ்சி, பட்டினத்தாரின் அடிமையானார். அவ்வரசனே பத்திரகிரியார் என்று விளங்கிய அடியார்.

பட்டினத்தடிகளும், பத்திரகிரியாரைத் திருவிடைமருதூர் செல்ல உத்தரவிட்டார். சிவத் தல யாத்திரை முடித்துக் கொண்டு பட்டினத்தடிகள் திருவிடைமருதூரை அடைந்து கீழைக் கோபுர வாயிலிலிருந்தார். குரு ஆணையின்படி பத்திரகிரியார் மேலக் கோபுர வாயிலில் இருந்தார். அப்பொழுது ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் பட்டினத்தடிகளிடம் சென்று பிச்சை கேட்டான்.

''மேலக்கோபுர வாசலில் ஒரு குடும்பி இருக்கிறான், அவனைப்போய்கேள்'' என்று பட்டினத்தடிகள் கூற, அவனும் மேலைக் கோபுரவாயிலுக்குச் சென்றான். பத்திரகிரியார் ஓட்டில் பிச்சை ஏற்று தாமுண்டு எஞ்சியதை ஒரு நாய்க்கு அளித்து வந்தார். அந்த நாயும் அவருடனே இருந்து வந்தது. பிச்சைக்காரன் பத்திர கிரியாரிடம் வந்து பட்டினத்தடிகள்தங்களைக் குடும்பி என்று கூறினாரே என்று கூறப் பத்திரகிரியாரும் அதற்குக் காரணம் தம் அருகில் இருந்த ஓடும் நாயுமே காரணம் என்று உணர்ந்தார் பத்திரகிரியார், தன் கையிலிருந்த திருவோட்டை நாயின் மீது வீசி எறிந்தார். ஓடும் உடைந்தது, நாயும் இறந்தது. மறு பிறவியில் அந்த நாய் அரசிளங்குமரியாக பிறந்தது என்பர். அந்த நாயின் நினைவாக, திருவிடைமருதூர் குளக்கரையில் ''நாயடி யாள் கோயில்'' இன்றும் உள்ளது.

பத்திரகிரியாருக்கு வீடு பேறு அளித்தபின் பட்டினத்தடிகள் சீர்காழி அடைந்து (1) திருக்கழுமழ மும்மணிக் கோவையும், தில்லை சேர்ந்து (2) கோயில் நான்மணி மாலையும், காஞ்சி மாநகர் அடைந்து (3) கச்சிதிருவெந்தாதி (4) திருஏகம்ப மாலை (5) கச்சித் திருஅகவல் முதலியவற்றையும் பாடி பல தலங்களையும் கண்டு திருவொற்றியூர் வந்து வணங்கித் திருவொற்றியூர் எடதாகை, முதல்வன்முறையீடு, அருட் புலம்பல் முதலியன பாடி அருளினார். ஒற்றியூரின் ஊர்ப்புறத்தே மாடு மேய்க்கும் சிறுவர்களோடு வழக்கமாக விளையாடுவது போன்று விளையாடி அருகிலிருந்த ஒரு குழியில் அமர்ந்து தம்மை மணலும் செடிகொடிகளுங் கொண்டு மூடச் செய்து சிவயோகத்தில் அமர்ந்து சிவலிங்க வடிவமானார்.

பதினொன்றாம் திருமுறையில் ஏழு மும்மணிக் கோவைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று திருவிடைமருதூர் மும்மணிக்கோவையாகும். 30 பாடல்கள் கொண்ட இந்த அருள் நூல் திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமானின் அருமையில் எளியவான் கருணை பெருந் திறத்தினை விளக்குகின்றது. இன்றும் திருவிடை மருதூர் கீழைக் கோபுரத்தில் பட்டினத்தடிகளும், மேலக் கோபுரத்தில் பத்திரகிரியாரும் நமக்கு காட்சி தருகின்றார்கள்.

பட்டினத்தார் திருமூலரைப் போன்று உயரிய உண்மைகளை எளிய சொற்களில் கூறி நகைச்சுவையும் கலந்து, நமக்கு உலகப்பற்று நீங்கி உண்மை அறிவு பெற உதவுவார். அவரது கருத்துக்களில் சில காண்போம்.

### பிறப்பு இறப்பு

நமது வாழ்க்கையில் சங்கு மூன்று விதங்களில் பயன்படுகிறது. முதற்சங்கு அன்னையின் கையில் ஏறிக் குழந்தைப்பருவத்தில் பால் புகட்டுகிறது. இரண்டாவது சங்கு ஒரு பெண் கழுத்தாகக்

காட்சி தருகிறது. வாலிபத்தில் சிற்றின்பம் ஊட்டு கிறது. பிறகு நாம் இறந்ததும், நம்மை இடு காட்டிற்கு மூன்றாவது சங்கு ஊதி அனுப்புகிறது.

பிறவியே கூடாது. பிறந்துவிட்டால், இறவா திருக்க மருந்து நடராஜமூர்த்தியின் திருவடிகளைச் சரண அடைவதேயாகும்.

உடம்பில் ஒன்பது துவாரங்கள் உண்டு. ஒன்பது வாய்ப் புண்ணான இந்த பிறப்பு இறப்பு ஆகிய நோய் நீங்க, திருவொற்றியூர் வீதியில் செல் லும் அடியார்களின் திருவடி தூளே மருந்தாகும். அங்கே சென்று ஒரு முறை புரண்டு வலம் வருக என்கிறார்.

## பெண் ஆசை

ஆசையான பாம்பு புத்தியான மதியை விழுங்கி கிரகணம் மாதிரி ஆகிவிடும். காது, மூக்கு, கண் அழகுகளைக் காட்டி வாழும் பெண் உருவை காலனின் தூது என்று எண்ணாமல் சுகம் என்று நாடுகிறேனே.

நாவார அன்புடையார் போல் பேசி, 'உமைப் பிரிந்தால் என் உயிர் நீங்கும்' என்றெல்லாம் கூறி, பணம் இல்லாவிட்டால், கைவிட்டுவிடும் பெண் களுக்கு ஏன் உபகாரம் செய்யவேண்டும் என்கிறார்.

## நிலையாமை

நாம் பிறக்கும் போது ஒன்றுமே கொண்டு வரவில்லை. இறக்கும் போது எதுமே கொண்டு போகவில்லை. நடுவிலே வந்த செல்வம் நிலை அற்றது என்பதை உணர்ந்து ஏழைகளுக்கு உதவக் கூடாதா? என்கிறார் பட்டினத்தார்.

## நம்மால் என்ன பயன்

நிலையாத உலகில் நேர்மையைக் கடைப் பிடிப்பவர் நல் வாழ்வுபெற முடியுமே! நேர்மையற்ற வர் ஏன் வாழ வேண்டும் என்று கேட்கிறார்.

பொய் சொல்பவர், நல்லவரை நிந்திப்பவர், தாயைத் திட்டுபவர், சதிகாரர், சாஸ்திரங்களில் ஆராய்ச்சி இல்லாதவர், பிறருக்கு உதவாதவர், ஏழை களுக்கு உதவும் குணம் இல்லாதவர் இருந்தால் என்ன, போனால் என்ன?

நாய் கூட வேட்டையாடும்போது, தன் தலை வன் மீது ஒரு மிருகம் பாய்ந்தால், அவனைக் காப் பதற்காக தன் உயிரையே விட்டுவிடும். இப்படிப் பட்ட உலகில் தாய்வயிற்றில் மனிதனாப் பிறந்து, பணக்காரனாகவும் பிறந்து பிறருக்கு உதவாது, வறண்ட குளம், காயாத மரம், கல்லால் செய்யப்பட்ட பசு போல் உபயோகம் இல்லாதவர் ஏன் வாழ வேண்டும்? அவர்களால் என்ன பயன் என்கிறார் பட்டினத்தார்.

தன்னையே குணம் இல்லாதவராகக்கூறி பொல்லாதவன், நல்ல நெறி இல்லாதவன், ஐம் புலன்களை வெல்லாதவன், கல்வி கல்லாதவன், அடியவரிடம் செல்லாதவன் உன் திருவடிக்கு அன்பு இல்லாதவன் நான் ஏன் பிறந்தேன்? என்று வினவு கிறார்

அது மட்டுமல்ல. இறைவனே உன் அடியவர் கள் எப்படிப்பட்டவர்கள்? ஒருவர் மகவை அரிந்து உனக்கு உணவாகப் படைத்தவர். மற்றொருவர் இளைய மனைவியையே தியாகம் செய்தவர். இன் னொருவர் தன் கண்களைத் தோண்டி உனக்கு அளித்தவர். இம்மாதிரி பக்தி எனக்கு இல்லையே? நான் எப்படி உன் அடிமையாவேன் என்கிறார்? எல்லாவிதமான பிழைகளையும் பொறுத்து என்னை ஆட்கொள்ளவேண்டும் என்று முறையிடுகிறார்.

குரங்குக் குட்டி தன் தாயின் வயிற்றினைக் கட்டிக்கொண்டு வாழும். என்ன வந்தாலும் விடாது. அதுபோல உன் திருவடியினை இறுகப்பற்றிக் கொள்ள அறிந்தேன் இல்லை. பூனை தன் குட்டியை வாயில் கவ்விக் கொண்டு ஓடும். அதுபோல் நீ தான் என்னை எடுத்து ஆட்கொள்ளவேண்டும் என் கிறார் பட்டினத்தார்.

## பட்டினத்தார் காட்டியவழி

எமதர்மராஜன் வருவதற்கு முன்னால் பல அடையாளங்கள் தெரியும். கண் பஞ்சடைந்துவிடும். வாயில் பாலை ஊற்றினால் இறங்காது. கடைவாயின் வழியே வழிந்துவிடும். இவை உண்டாகி நாம் மரண மடைய நம் உற்றார், உறவினர், நம்மீது விழுவதற்கு முன்னமே ஆண்டவனின் திருநாமத்தைக் கூறுங்கள்.

உயிர் போய் விடும். உடனே உற்றார் உற வினர்கள், நம்மைச்சுட்டு எரித்து விடுவார்கள். எனவே எப்போதும் இறைவன் திருநாமம் கூறிக் கொண்டே இருங்கள்.

உயிரோடு இருப்பது பொய். 'இறப்பது மெய்' எனவே ஒருவருக்கும் தீங்கு மனதால் கூட நினைக் காதீர்கள்.

எதுவும் நம்முடையதில்லை. நம் உடம்பு நம்முடையதென்று நாம் நினைக்க, நாய் நரி பேய் கழுகு தம்முடையது என்று நினைக்கும். எனவே ஜாக்கிரதையாக இருங்கள் என்று எச்சரிக்கிறார்.

''எல்லாம் அறிந்து படித்தேயிருந்து எம்க்குள்ளபடி
வல்லான் அறிந்துளன் என்று உணராது மதிமயங்கிச்
சொல்லான் மலைந்துறு சூழ் விதியின் துக்கித்துப்பி
எல்லாஞ் சிவன் செயலே என்பர் காண் கச்சியே-
கம்பனே.

# சிவ சிந்தனைகள்

**- V. ராஜகோபாலன்**

1. வேதங்களுள் யஜுர்வேதம் முக்கியமானது. அதற்குள் அதன் மத்திய பாகமான நாலாவது காண்டம் முக்கியமானது. அதற்குள்ளும் மத்திய பாகமான நாலாவது பிரச்னம் முக்கியமானது. அதுதான் ஸ்ரீருத்ரம். அதற்குள்ளும் நமச்சிவாய என்ற பஞ்சாக்ஷர வாக்யம் மத்தியிலிருக்கிறது. அதன் மத்தியில் 'சிவ' என்ற இரண்டு அக்ஷரம் அடங்கி இருக்கிறது. இதையே ஜீவரத்னம் என்று பெரியோர் கூறுவார்கள்.

2. ஈஸ்வரன் என்ற பதத்திற்குத் தலைவன் என்று பொருள் இருந்தாலும், பொதுவாக உலகத்தில் ஈஸ்வரன் என்ற சொல் சிவனுக்கே வழங்கப்படுகிறது. இது சிவன், தெய்வங்களின் தலைவன் என்பதையே காட்டுகிறது.

3. லிங்கம் என்ற சொல்லுக்கு அடையாளம் என்று அர்த்தம். லிங்கம் நர்மதை ஆற்றில் கிடைக்கிறது. லிங்கத்திற்கு ஆதியும் அந்தமும் (ஆரம்பமும் முடிவும்) இல்லாததால், லிங்கம் இறைவனைக் காட்டும் அடையாளம் ஆகிறது. இந்த லிங்கத்தின் மேல் பகுதி சிவபாகம் என்றும், நடு பாகம் விஷ்ணுபாகம் என்றும், அடி பாகம் பிரம்மாவின் பாகம் என்றும் சொல்வர்.

4. ஜாபால உபநிஷத்தில் மோட்சம் அடைய மார்க்கமாக சதருத்ரீயத்தை படிக்கும் படி சொல்லப்பட்டிருக்கிறது. ருத்ரத்தில் உள்ள நூற்றுக்கணக்கான சிவ நாமங்கள் சதருத்ரீயம் ஆகும்.

5. மகாவிஷ்ணு நரசிம்ம அவதாரம் எடுத்து இரண்யனை அழித்து உக்ரமாக இருந்த போது, சிவன் சரபேஸ்வரர் என்ற வடிவம் தாங்கி விஷ்ணுவின் கோபத்தைத் தணித்ததாக சரபோபநிஷத் கூறுகிறது.

6. ஸ்ரீருத்ரத்தில் சிவனை பூஜிக்கும் கை தெய்வக்கை என்று கூறப்பட்டிருக்கிறது.

7. சிவனுடைய (லிங்கத்தில் உள்ள) ஆவுடையார் கிழக்கு நோக்கியோ அல்லது வடக்கு நோக்கியோ இருக்க வேண்டும். தெற்கு அல்லது மேற்கு நோக்கி இருக்கக்கூடாது.

8. சிவன் கோவில்களில் சிவன் சந்நதிக்குப் பின் புறம் லிங்கோத்பவரோ அல்லது விஷ்ணுவின் சந்நதியோ இருக்கும்.

9. தக்ஷிணாமூர்த்தி, மற்றும் லிங்கோத்பவர் போன்றவைகள் சிவனுடைய மூர்த்திகள். இது போன்ற சிவனுடைய மூர்த்திகள் மொத்தம் 64.

10. ஒவ்வொரு மாதமும் கிருஷ்ணபக்ஷம், மற்றும் சுக்ல பக்ஷத்தில் வரும் திரயோதசி சிவனுக்கு மிகவும் உகந்தது. இந்நாட்களின் சாயங்கால வேளைகளையே பிரதோஷம் என்று சிவன் கோயில்களில் கொண்டாடப் படுகிறது.

11. மாசி மாதம் கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியில் வரும் சிவராத்திரியே மகாசிவராத்திரி என்றாலும் ஒவ்வொரு மாதமும் கிருஷ்ணபக்ஷ சதுர்தத்சியில் வரும் சிவராத்திரி மாத சிவராத்திரி என்றும், தினமும் சிவனை வழிபடுவதை நித்ய சிவராத்திரி என்றும், திங்கள் கிழமை அமாவாசை வந்தால் யோகஜன சிவராத்திரி என்றும் வழங்கப்படுகிறது.

12. சிவனுக்கு பில்பம் (வில்வம்) உகந்த தாயினும், துளசி, முகிழ், சண்பகம், தாமரை இலை, கல்ஹாரம், தர்பம், அருகு, மருதாணி, மருக்கொழுந்து, நாயுருவி, விஷ்ணு கிராந்தி, நெல்லி, அலிவல்லி போன்ற பத்ரங்களால் சிவனை பூஜிக்கலாம் என்று மந்தரமகோததி என்ற கிரந்த நூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

13. முல்லைஇலை, கிளுவை இலை, நொச்சி இலை, வில்வம், விளா இலை (அல்லது) வன்னி இலை என்பவைகள் பஞ்ச வில்வங்களாகும். இவற்றால் சிவனின் ஐந்து முகங்களுக்கு அர்ச்சிப்பது பஞ்ச முக அர்ச்சனை எனப்படும். அந்த ஐந்து முகங்களாவன. (1) ஈசான முகம் (2) தத்புருஷ முகம் (3) அகோர முகம் (4) வாமதேவ முகம் (5) சத்யோஜாதமுகம் என்பவைகளாகும்.

14. ருத்ராக்ஷம் என்பது சிவனுடைய மூன்றாவது கண் என்றும் மற்றும் சிவன் திரிபுரம் வதம் செய்தபோது சிவனுடைய கண்களில் இருந்து சிதறிய நீர் துளிகளே ருத்ராக்ஷம் என்றும் கூறப்படுகிறது.



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் திருப்பாவை விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னை இணை ஆணையாளர் திருமிகு இரா. சுப்பிரமணியன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் உதவி ஆணையாளர்/செயல் அலுவலர் விழா ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

*15.* திருவிடை மருதூரில் உள்ள சிவலிங்கத்திற்கு மகாலிங்கம் என்றே பெயர். பொதுவாக சிவன் கோவில்களில் சிவலிங்கத்திற்கு கபாலீஸ்வரர் என்றோ வன்மீகநாதர் என்றோ ஈஸ்வரன் அல்லது நாதனுடன் கூடிய பெயர் இருக்கலாம். ஆனால் இந்தக் கோவிலில் மட்டும் அவ்வாறு இல்லாமல் மகாலிங்கம் என்றே பெயர் இருக்கிறது.

*16.* திருவெண்காட்டில் உள்ள சிவஸ்தலத்தில் சிவபெருமான் ஸ்வேதாரண்யேஸ்வரர், நடராஜர் மற்றும் அகோர மூர்த்தி என்று மூன்று ரூபங்களில் தரிசனம் தருகிறார்.

*17.* காளஹஸ்தியில் உள்ள லிங்கத்தில் நவ கிரகங்களும் அடக்கம் ஆனதாகக் கருதப்படுகிறது.

*18.* திருச் செங்கோடு சிவன் கோயிலில் சிவன் அர்த்த நாரீஸ்வரராக காட்சி அளிக்கிறார்.

*19.* திருக் கேதாரீயத்தில் உள்ள கேதாரீஸ்வரர் ஜோதிர் லிங்கங்களில் ஒன்று. இங்கு இறைவன் லிங்க வடிவில் இல்லாமல் மலை போன்று காட்சி அளிக்கிறார்.

*20.* தமிழ்நாட்டில் உள்ள இராமேஸ்வரத்தில் ராமர் வழிபட்ட ராமநாதஸ்வாமி ஜோதிர்லிங்கங்களில் ஒன்றாகும்.

*21.* சுசீந்தரத்தில் உள்ள தாணுமாலையன் கோயிலில் உள்ள தாணுமாலையன் என்ற கடவுள் சிவன், விஷ்ணு மற்றும் பிரம்மாவின் ஐக்கியமாகும்.

*22.* சிவன் என்ற சொல்லுக்கு மங்களம் என்று பொருள். ஸ்ரீ ருத்ரம் சிவனைப்பற்றிப் பேசுகையில் 'சிவதராயச' என்று கூறுகிறது. இதன் பொருள் சிவன் அதிமங்கள வடிவினர் என்பதாகும்.

*23.* புராணங்கள் சிவனைப்பற்றிப் பேசுகையில் அவர் சுடுகாட்டின் அமைதியை ரசிப்பவர் என்றும், தியானத்தின் அமைதியை ரசிப்பவர் என்றும் கூறுகிறது.

★★★

# அருள்மழை பொழியும் அறுமுகச் செவ்வேள்!

– பாம்பனார் பைந்தமிழ் அரசு ஸ்ரீலஸ்ரீ தேவி கருமாரி தாசர்

எந்த வேளையும் கந்தவேளைச் சிந்தையில் சிந்தித்து வாழும் அருளாளர்கள் உலகம் உய்ய பல அதிசயம் புரிந்தனர். நக்கீரர் காலம் தொட்டு வழி வழியாக வந்த முருகன் அடியார்கள் எண்ணிலடங்கார். முருகன் பெருமையை விரித்துரைக்கும் நூல்கள் எத்தனையோ உள்ளன என்றாலும் கந்த புராணத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. கந்தப்பெருமான் தமது சொந்தப் பெருமான் என்று நினைந்து உருகி பந்தமறப் போற்றி வழிபடும் அன்பர்கள் முருகன் பேரருளுக்கு பாத்திரம் ஆவார்கள். கலியுக வரதன், கண்கண்ட தெய்வம் ஆகிய முருகன் கலிக் கொடுமையை நீக்கி கருணை மழை பொழிந்து உயிர்களை வாழ வைக்கிறான்.


கந்தப் புராணம், 18 புராணங்களில் தலை சிறந்தது. கந்தப் பெருமானுடைய திருநாமங்களில் கந்தன் என்ற சொல் தனிச் சிறப்பே வாய்ந்தது. பகைவர்களின் பராக்கிரமத்தை வற்றச் செய்யும் பேராற்றல் உடையவன் என்னும் பொருளுடையது. ஆன்மாக்களுக்கும் பற்றுக் கோடானவன் கந்தன். கந்து என்னும் சொல்லுக்கு யானை கட்டும் தறி என்பது பொருள். அன் என்பது ஆண்பால் ஒருமை விகுதி. கந்தன் ஆன்மாக்களின் உயிர்த் தோழன். ஆன்மாக்களுக்கு பற்றுக் கோடாக அருள் புரியும் முதல்வனுடைய புராணம் இது என்பதைக் குறிப்பிட்டு கந்தப்புராணம் என குறிப்பிடுவதாயிற்று. கீதை அருளிய கண்ணபிரான் விபூதியோகத்தில் ''சேனைத் தலைவருக்குள் நான் கந்தனாக இருக்கிறேன்'' எனக் குறிப்பிடுகிறார். கந்த புராணத்தில் இல்லாத பொருள் எந்தப்புராணங்களிலும் இல்லை. கந்தப் புராணத்தில் எந்தப்பொருளும் உள்ளது என்ற பழமொழியின் மூலம் இதன் பெருமையை உணரலாம். அப்படிப்பட்ட கந்தப் புராணத்தை இனிய செந்தமிழில் - தெய்வத்திரு நெறியத் தமிழில் வழங்கியவர் கச்சியப்பர் ஆவார்.

கச்சியப்பர் வடமொழிக் கடலையும், தென் மொழிக் கடலையும் நிலைகண்டுணர்ந்த முனிவர் ஆவர். ஒப்பற்ற உயர்ந்த உன்னதமான கந்தன் சரித்திரத்தை கூறுகின்ற அன்பினாலே வலிமை மிகுந்தவர். மனவலிமை மிகுந்து மதிவலி சிறந்து விளங்கிய கச்சியப்பர் மனதில் வசித்த முருகப் பெருமானே'' என்று பாம்பன் சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

"இனிய வடமொழி அமுதம் உண்டு
தென்மொழிவாரம்
என்ற கடலைக் குடித்தோன்
இணையிலா உன் சரிதை கூறுவலி கொண்டு
அன்பில் ஏறுமொரு கச்சியப்பர்
மனதிடை வதிந்த பொருளே''

என்று கூறும் பாம்பன் அடிகளார் பாடல் கச்சியப்பருடைய புலமையையும் பக்தியையும் ஞான உணர்வையும் புலப்படுத்துகிறது இந்தக் கச்சியப்பர் வேதம் உணர்ந்தவர் - இருபத்தெட்டு சிவாகமங்களைக் கற்றவர். பதினெண் புராணங்களைப் பயின்றவர். அவரால் இயற்றப்பெற்றது கந்தப்புராணம். ஒவ்வொரு புராணமும் ஒவ்வொரு உணர்மையை - போதனையை விளக்குகிறது. அவ்வகையில் கந்தப் புராணம் பல உண்மைகளை உணர்த்துகிறது போதனைகளை தருகிறது. வடமொழியில் சங்கர சமிதை பன்னிரெண்டு காண்டங்களை உடையது. அவற்றுள் முதல் காண்டம் சிவரகசிய காண்டம். சிவரகசிய காண்டத்தில் சம்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம், உபதேச காண்டம் என்ற ஏழு காண்டங்கள் உள்ளன. வேத வியாசர் அருளிச் செய்த கந்தப் புராணத்தின் இந்த ஏழு காண்டங்களில் முதல் ஆறு காண்டங்களை தமிழில் தந்த தவக் கவிஞர் கச்சியப்பர்.

கச்சியப்ப சிவாச்சாரியார் காஞ்சியிலே அவதரித்தவர். காஞ்சியில் உள்ள குமரக் கோட்டத்து முருகப் பெருமானை மெய்யன்புடன் வழிபட்டவர். உண்மையான அன்பு கொண்டு உள்ளம் உவப்ப வழிபடும் அன்பர்களுக்கு கனவிலும் நனவிலும் காட்சி தருபவர் கந்தப் பெருமான். கனாக் களுக்கு ஒரு தனிப்பலன் உண்டு. யானையை கனவில் கண்டால் ஞானம் சிறக்கும். நாகத்தைக் கனவில் கண்டால் தேவதை அருள் கிடைக்கும். கந்தப் பெருமானைக் கனவில் கண்டார் கச்சியப்பர் என்றால் பெற முடியாத பொருள் உளதோ? கனவில் தோன்றிய கந்தப் பெருமான் ''வோதாகமங்களை கண்டுணர்ந்த வித்தகனே, உலக உயிர்கள் உய்யும்



பொருட்டு கந்தப் பராணத்தை தமிழில் பாடுக'' என்றுக் கட்டளையிட்டு அருளினார். அது மட்டுமின்றி ''திகடச்சக்கரம்'' என்ற சொல்லை அடியெடுத்துக் கொடுத்தார். கச்சியப்பர் கண்விழித்து எழுந்தார் மெய் சிலிர்த்தது. மேனி புளகாங்கிதமடைந்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. ஆம்! உடல் குளிர்ந்தது. உயிர் தழைத்தது! உணர்ச்சி ஓங்கியது! உள்ளம் கனிந்தது! ஆனந்தப் பரவசத்தில் ஆழ்ந்தார்!

கந்தப் பெருமான் கருணையை வியந்து ''எளியேன் மீது வைத்த தேவரீர் கருணைத்திறனை எவ்விதம் புகல்வேன்? மூவருக்கும், தேவருக்கும், ஜீவருக்கும் எட்டாத முழு முதற் பொருள், அடியேன் கனவில் தோன்றி ஆட்கொண்டருளினானே'' என்று அதிசயித்தார்! வியந்து வியந்து விதிர் விதிர்ப் பெய்தினார். கச்சியப்பர் பெற்ற பேறு யார் பெற்றார்! யார் பெறுவார் என்றல்லவா எண்ணத் தோன்றுகிறது! வாக்குக்கும் மனதிற்கும் எட்டாத பரம்பொருள் தனது வாக்கினாலேயே ''திகடச் சக்கரம்'' என்று அடியெடுத்துக் கொடுத்து ஆட்கொண்டருளிய பெருமையை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து மனமுருகிப் பாடினார். பாடிய பாக்களை நாள்தோறும் இறைவன் சன்னிதானத்தில் வைத்து அவன் ஏற்றுக் கொண்ட பிறகே மகிழ்வார். அந்நூல் முழுவதும் பக்திச்சுவை நனிச் சொட்ட சொட்ட விளங்கும் காட்சி, அருள் மாட்சி உடையோருக்கே புலனாகும். பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து (10,345) செய்யுளாகக் கொண்ட நூலை காஞ்சீபுரத்தில் உள்ளக் குமரக் கோட்டத்தில் இறைவன் முன் பீடத்தில் வைத்து பூசித்தார். இந்த நூலை புலவர்கள் போற்றும் வரையில் எவ்வாறு அரங்கேற்றுவேன் என்று எண்ணினார். துதித்தார். இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட இந்நூல் முழுமையாக முற்றுப் பெற்று இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அருள் நிறைந்த புலவர்களும் ஆகமச் செம்மல்களும், வேத வேதியர்களும் ஏற்றுக் கொண்டு வாழ்த்தும் நாள் எந்த நாளோ? என்று எண்ணி எதிர்பார்த்தார். குமரக் கோட்டத்தில் ஒருநாள் மன்னர்கள், வேதசித்தர்கள், சிவாகமச் செம்மல்கள், செந்தமிழ்ப் புலவர்கள், திருமுறை விற்பன்னர்கள், அடியார்கள் எல்லோரும் கூடினார்கள். கச்சியப்பரோ, கந்தப் புராணத்தை கந்தன் முன்னே வைத்து மலர்கள் தூவி அட்சித்தார். கவிமலருக்கு மணமலர் அர்ச்சனை செய்து மகிழ்ந்தார். அடியார்கள் அவரை உயர்ந்த ஆசனத்தில் அமர வைத்து கந்தப் புராணத்தை அரகேற்றுமாறுக்கேட்டுக் கொண்டனர். திருநீற்றை மெய்யணிந்த அன்பர்கள், ''முருகா முருகா'' என்றுரைத்து உள்ளம் உருகி அன்புடன் அமைதியாக அமர்ந்தனர். மறைநூல் தெளிந்து, ஆகமம் உண்ர்ந்து அருள்தமிழ் ஆய்ந்து அறுமுகன் அருள் பெற்ற கச்சியப்பர் முதற்பாடலைச் சொல்லத் தொடங்கினார்.

''திகடச் சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சுக்கர வின்மணி யாவுறை
விகடச் சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்''

எந்தச் செயலும், இனிதாக எளிதாக நிறைவேற விநாயகப் பெருமானை வணங்குதல் சைவாச்சார மரபு. அம்மரபுப்படி விநாயக வணக்கத்தை நன்கு பாடியருளிய பாடல் இது. தெய்வங்களுக்குள் தெய்வமாகிய - தேவசிகாமணியாகிய கந்தனின் திருவிளையாடலைத் தொடங்குவதற்கு அற்புதமான தமிழ்ப் பாடலால் கணபதியைத் துதித்த பாடல் இது! விகடச் சக்கர விநாயகன் காஞ்சீபுரத்திலுள்ள ஏகாம்பரர் திருக்கோயிலின் வெளிப்பிரகாரத்தில் உள்ளவர். கம்பா நதி என்ற தீர்த்தத்திற்கு அருகிலுள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் வீற்றிருப்பவர். இவருக்கு ஏன் விகடச் சக்கர விநாயகர் என்ற பெயர் வந்தது?

*(அடுத்த இதழில் தொடரும்)*

★★★

# ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள்

- முனைவர் இரா. விஜயராகவன், எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.

இந்து சமயத்தின் இரு கண்களென விளங்குபவை சைவமும் வைணவமுமாகும். எல்லாச் சமயங்களும் மக்களை நல்வழிப்படுத்தி நன்மையளிக்கவே தோன்றியவை. எனவே சமயப் பொதுமையும், சமய உணர்வும் நிலவிக் காழ்ப்புணர்ச்சியும் வேறுபாடுகளும் மறைந்து தாம் பிறந்த சமயத்தின் வழி ஒற்றுமையுடன் இந்நிலவுலகில் வாழ்வதே மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரின் கடமை. இதற்குச் சமயநூல்கள் பலவும் வழிகாட்டுகின்றன. இவ்வகையில் வைணவத்தின் திருப்பாவையும், சைவ சமயம் சார்ந்த திருவெம்பாவையும் மகத்தான பணியைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் ஆற்றி வருகின்றன. இவ்விரு நூல்களையும் ஒரு சிறிது ஒப்பிட்டு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## நூலாசிரியர்கள் தோற்றமும் வரலாறும்

திருப்பாவை பாடிய ஆண்டாள் திருவில்லிபுத்தூரில் வாழ்ந்து வந்த பெரியாழ்வாரால் தமது துளசித் தோட்டத்தில் கண்டெடுக்கப்பட்டவர்; கோதை எனும் இயற்பெயர் பூண்டவர்; ''மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்ற உறுதியுடன் திருமாலையே மணாளனாக வரித்துக் கொண்டவர்; தான் சூடிக்கொடுத்த மாலையையே மாலவனையும் விரும்பச் செய்தவர்; இதனால் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்றும், இறைவனையே ஆண்டதால் 'ஆண்டாள்' என்றும் போற்றப்பெற்றவர். பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் ஒருவரே பெண்ணினம் சார்ந்தவர். இவர் இயற்றிய 'நாச்சியார் திருமொழியும்' 'திருப்பாவை'யும் தமிழ் இலக்கிய வானில் சுடர்விட்டு ஒளிர்பவை. ஆண்டாளின் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு என்பது வரலாற்று அறிஞர்கள் துணிபு. இவருடைய திருப்பாவை முப்பது பாடல்களைக் கொண்டது.

''நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர்கலந்து, உவட்டாமல் இனிக்கும்'' திருவாசகத்தின் ஒரு பகுதியே திருவெம்பாவை எனும் இருபது பாடல்களைக் கொண்ட தொகுதி. சைவத் திருமுறைகளுள் எட்டாவதாக விளங்கும் திருவாசகத்தினை மாணிக்கவாசகர் இயற்றினார். இவர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரில் அந்தணர் மரபில் தோன்றியவர்; அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராக விளங்கியவர்; திருப்பெருந்துறையில் சிவபெருமானால் ஞானாசிரியனாக வந்து ஆட்கொள்ளப் பெற்றவர். இவர் காலம் பற்றி இரு வேறு கருத்துகள் நிலவுகின்றன. கி.பி. 3 ஆம் நூற்றாண்டு எனச் சிலரும், கி.பி. 9ஆம் நூற்றாண்டு என வேறு சிலரும் கருதுகின்றனர். இத் திருவெம்பாவை மாணிக்கவாசகரால் திருவண்ணாமலையில் அருளிச் செய்யப்பெற்றது.

## பாவை நோன்பும் பாவைப் பாடல்களும்

பாவை என்பது பல பொருள் குறித்த ஒரு சொல்; இச்சொல்லுக்கு அழகான உருவம், பெண், புதுமை, நோன்பு, விழி, மலர், கூத்து, மதில் எனப் பல பொருள்களுண்டு. மண்ணாலான உருவமும் பாவை என்றே வழங்கப்படும். அத்தகைய உருவத்தை அமைத்து மகளிர் நோன்பு நோற்ற காரணத்தால் அந்நோன்பைப் பாவை நோன்பு என வழங்கினர்; இந்நோன்பை அடிப்படையாகக் கொண்ட பாடல்களைப் பாவைப்பாடல்கள் எனப் போற்றினர். பாவை என்னும் சொல் விளியேற்று 'பாவாய்' என ஈற்றில் அமைந்த பாடல்களே பாவைப்பாடல்களாகும். திருப்பாவை மற்றும் திருவெம்பாவை ஆகிய இரண்டிலும் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் அமைந்த 'பாவாய்' எனும் விளிச்சொல்லானது வழிபடும் உருவத்தை அல்லது பாவை நோன்பு நோற்கும் பெண்களை அழைப்பதாகக் கொள்ளலாம். இந்நோன்பு 'மாதங்களில் நான் மார்கழி' எனக் கண்ணனால் போற்றப்பட்ட மார்கழித் திங்களில் நோற்கப்படுகிறது.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
(திருப்பாவை)
போற்றியாம் மார்கழி நீராடேலோரெம்பாவாய்
(திருவெம்பாவை)

மேற்கூறிய இரண்டு அடிகளும், பாவை நோன்பு மார்கழித்திங்களில் நடைபெறுவதையும், அந்நோன்பை ஒட்டியே இவ்விரு நூல்களும் எழுந்தன என்பதையும் வெளிப்படுத்துகின்றன.



### பாவை நோன்பின் நோக்கம்

பாவை நோன்பு பெண்களால் நோற்கப்பெறுவது எனப் பார்த்தோம். நல்ல கணவரை அடைவதும், நாடும், வீடும் செழிக்க மழை பொழிய வேண்டுதலும் பாவை நோன்பின் முக்கிய நோக்கங்களாகும். இவ்விரண்டும் அடையப்பெற்றால் வீடும், ஊரும், சமூகமும், நாடும் உன்னத நிலையடையுமன்றோ?

மழை பொழிவதுடன், ஆவினம் பெருகுதலும், பாவங்கள் நீங்கலும் நோன்பின் பயன்களாக திருப்பாவையின் கீழ்க்கண்ட வரிகளால் அறியப் பெறுகின்றன.

''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீதின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோரெம்பாவாய்.''

''வாயினாற்பாடி மனதினாற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் , செப்பேலோர் எம்பாவாய்.''

சிவத்தொண்டும், சிவனடியார் மீது அன்பு வேண்டலும் திருவெம்பாவையின் நோக்கம் என்பதை பின்வரும் வரிகள் உணர்த்தும்.

எம்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க;
கங்குல் பகல் எம்கண் மற்று ஒன்றும் காணற்க;
இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு
ஏலோரெம்பாவாய்.

அடுத்து மேலும் சில தலைப்புகளில் இவ்விரண்டு பாவை நூல்களையும் ஒப்பிட்டுக் காண்போம்.

### பெண்மை அனுபவமும் பக்தி அனுபவமும்

ஆண்டாள் ஒரு பெண்; அதனால்தான் அவருடைய திருப்பாவையில் நேரடிப் பெண்மை அனுபவம் பளிச்சிடுகிறது. ஓர் இளம் பெண்ணின் உள்ளத் துடிப்பையும் காதல் நெஞ்சத்தையும் திருப்பாவையில் உணரமுடிகிறது. மணிவாசகரோ தம்மைப் பெண்ணாகப் பாவித்துத் திருவெம்பாவையை இயற்றியவர். ஆகவே அவர்தம் பாடல்களில் பக்திச்சுவை பெண்மையனுபவத்தை விஞ்சி நிற்கிறதெனலாம்.

### நீராடுதல்

மார்கழி நோன்பில் வைகறை நீராடல் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. திருப்பாவையில் மார்கழி நோன்பின்போது பெண்கள் நீராடுவது குறிக்கப்படுகிறதேயன்றி காட்சிப்படுத்தப்படவில்லை. மணிவாசகர் அக்காட்சியினை இலக்கிய நயம் தோன்ற வெளிப்படுத்துகிறார். அவற்றுள் சில....

.... ''குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தோ''டேலோரெம்பாவாய்

''காதார்குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப்புனலாடி''

''மொய்யார் தடம் பொய்கைபுக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி''

### இறைவன் பெயரைக் கூறுதல்

பாவை நோன்பின் போது இறைவன் திருப்பெயரை விடாது சிந்தித்து நிற்பர் என்பதை,

''மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம்பலவும் நவின்றேலோர் எம்பாவாய்''

எனும் திருப்பாவை அடிகளாலும்,

''சிவனே சிவனே என்றோலமிடினும்
உணராய் உணராய் காண்''

''இருஞ்சீரான் சின்னங்கள் கேட்பச் சிவனென்றே
வாய்திறப்பாய்''

என்னும் திருவெம்பாவைப் பாடல்களாலும் அறியத் தகும்.

### துயில் நீக்கம் செய்தல்

திருவெம்பாவையில் முதல் எட்டுப் பாடல்கள் தோழியைத் துயில் எழுப்புவதாக அமைந்துள்ளன. இத்தகைய துயில் எழுப்பும் பாடல்கள் திருப்பாவையில் மிகுதி; ஏறக்குறைய பதிமூன்று பாடல்கள் இவ்வகையில் அமைந்துள்ளன. துயிலும் தோழியரை மட்டுமின்றி கண்ணன், யசோதை, நப்பின்னை, நந்தகோபன், பலராமன், வாயிற்காப்போன் ஆகியோரையும் துயில் நீக்கம் செய்யுமாறு திருப்பாவையில் பாடல்கள் அமைந்துள்ளன.

### உரையாடற் பாங்கு

உறங்கும் தோழிக்கும், எழுப்பும் நங்கைக்கும் இடையே நடைபெறும் உரையாடற் பாங்கில் இரு பாவை நூல்களிலும் சொற்றொடர்கள் அமைந்துள்ளது நம் உள்ளத்தைக் கவர்வதாகும். கருத்துகளில் மட்டுமன்றி சொல்லாட்சியிலும் இரண்டு நூல்களிலும் ஒற்றுமையைக் காணலாம். கீழ்க் கண்ட எடுத்துக்காட்டுகள் அதனை உறுதிப்படுத்தும்.

| | |
|---|---|
| வன்செவியோ நின் செவிதான் | (திருவெம்பாவை) |
| ஊமையோ அன்றிச் செவிடோ? | (திருப்பாவை) |
| சந்தம்கமழும் குழலீ | (திருப்பாவை) |
| கொங்குண் கருங்குழலீ | (திருவெம்பாவை) |
| வண்ணக்கிளிமொழியார் | (திருவெம்பாவை) |
| இளங்கிளியே | (திருப்பாவை) |
| நேரிழையீர் | (இரு நூல்களிலும்) |

திருப்பாவையில் 'எல்லோரும் போந்தாரோ?' என்ற வினாவிற்கு விடையாக 'போந்தார் போந்தெண்ணிக்கொள்' என வரும். இதே போன்று திருவெம்பாவையில் 'எல்லாரும் போந்தாரோ' என்ற வினாவைத் தொடர்ந்து பின்வரும் விடை பகரப் படுகிறது: ''எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம்; அவ்வளவும், கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே!''

### வைகறை வருணனை

வைகறைப் போதின் வருணனை இரு பாவை நூல்களிலும் சிறந்து விளங்குவதைக் காணலாம். திருப்பாவையில் அவற்றுள் சிலவற்றை அறிய முற்படுவோம்.

''புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின்பேரரவம் கேட்டிலையோ?''

''கீசுகீசென்றெங்கும் ஆனைச் சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம்''

''காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து''

''வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைப்படுத்தத் தயிரரவம்''

''கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்''

திருவெம்பாவையில் வைகறைப்போதின் காட்சிகள் எவ்வாறு வருணிக்கப் பெறுகின்றன? சிலவற்றை இவண் நோக்குவோம்.

கோழி சிலம்ப சிலம்பும் குருகு எங்கும்
எழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகல

### போற்றி எனும் சொல்லாட்சி

திருப்பாவை, திருவெம்பாவை ஆகிய இரண்டிலும் இறைவனைப் போற்றும் 'போற்றி' எனும் சொல் வழங்குகிறது.

''அன்றிவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்
திறல்போற்றி''

எனும் திருப்பாவைப் பாடலில் இச்சொல் வருகிறது.

திருவெம்பாவையில் இச்சொல் வருவதைக் கீழ்க்கண்ட பாடலால் அறியலாம்.

''போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்.''

### முடிவுரை

திருப்பாவை, திருவெம்பாவை இரண்டுமே இறையனுபவத்தை உணரத் துடிக்கும் ஆன்மாக்களின் முயற்சியையே வெளிப்படுத்துகின்றன. முன்னது வைணவம் சார்ந்தது; கண்ணனைத் தலைவனாகக் கொண்டது. பின்னது சைவ இலக்கியம்; அதன் தலைவன் சிவபெருமான். இரண்டுமே சமய இலக்கியம் என்ற நோக்கில் மார்கழி நீராடலையும், பாவை நோன்பையுமே பாடுகின்றன. எனவே இப் பாவைப்பாடல்கள் இரண்டுமே ஒரு கொடியிற் பூத்த இரு மலர்களாக அல்லது ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக விளங்குகின்றன எனில் அது மிகையன்று. ★

# பிரணவ மந்திரம்

– கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

'ஓம்' என்று, 'ஓம்' என்று சொன்னால் – உள்ளம்
ஓர்நிலையை எட்டுவதும் திண்ணம்
'ஓம்' என்று, 'ஓம்' என்று சொல்ல – உள்ளம்
ஒருமையிலே அமைதிகாண் பதுண்மை. (1)

'ஓம்' என்ற சொல்வந்த பின்னால் – உலகம்
உண்டான கதைஎன்ப துண்மை
'ஓம்' என்று ஒலிக்கின்ற நாதம் – உலகம்
ஓயாது உருளுவதின் கீதம். (2)

கடலலைகள் ஓய்ந்துவிடக் கடலில் – காற்று
கடலோடு பேசுவதும் ஓம் ஓம்
அடங்காத மனஅலைகள் ஓய்ந்தால் – அந்த
அமைதியிலே ஒலிப்பதுவும் ஓம் ஓம் (3)

மரமடர்ந்த மலைகளிலே காற்று – அந்த
மரங்களோடு பேசுவதும் ஓம் ஓம்
பெருகிவரும் ஆசைகளின் நடுவில் – உள்ளம்
'பெருநிலையில்' பேசுவதும் ஓம் ஓம் (4)

நீரோடை நடைபோடும் நிலவில் – அங்கு
நிகழ்கின்ற இசைவெள்ளம் ஓம் ஓம்
சீரொழுகும் அருவிகளின் நீரில் – தென்றல்
சிந்திவிடும் நாதமெலாம் ஓம் ஓம் (5)

பிரணவ மந்திரமாய் இறைவன் – இந்தப்
பிரபஞ்சச் சேர்க்கையிலே வாழ்வான்.
சரணம் சரணமென தியானம் – என்றும்
தவறாது செய்தாலவன் வருவான். (6)

ஓங்காரப் பிரபஞ்சம் உறைவான் – இறைவன்
உள்மூச்சில் உடலோடு கலப்பான்
ஆங்காரம் வெளிமூச்சில் விலக – அவனும்
அடிமனத்தில் உயிரோடு கரைவான். (7)

'ஓம்' என்ற உருவத்தில் உறைவான் – இறைவன்
'ஓம்' என்றால் ஓடோடி வருவான்.
'ஓம்' என்று 'ஓம்' என்று சொல்ல – இறைவன்
உயிரோடு ஒன்றாகி ஒளிர்வான். (8)

ஆத்மாவின் அவதாரம் ஓம் ஓம் – இறைவன்
ஆத்மாவால் பேசுவதும் ஓம் ஓம்
ஆத்மாவின் அந்தரங்கம் அறிய – இறைவன்
அடைத்துவைத்த ரகசியமும் ஓம் ஓம் (9)

ஒலியில்லா இடமெங்கும் ஓம் ஓம் – அந்த
ஒலிகேட்டு ஆத்மாவின் கண்கள்,
ஒளிகண்டு கலிதீரக் கண்டால் – எங்கும்
ஓம்சாந்தி, ஓம்சாந்தி, ஓம்சாந்தி ஓம் (10)

★★★

# எது சரியான விடை?

தொகுப்பு : அ. நிறைமதி

**வினா 1.** முருகனுக்கு முதன்முதலில் காவடி எடுத்துவந்தவர் இவர்களில் யார்?

அ. நக்கீரர்

ஆ. அருணகிரிநாதர்

இ. இடும்பன்

ஈ. வீரபாகு

**வினா 2.** முருகன் - வள்ளி திருமணம் நடைபெற்ற திருத்தலம் இவற்றில் எது?

அ. திருச்செந்தூர்

ஆ. திருப்பரங்குன்றம்

இ. சுவாமிமலை

ஈ. திருத்தணிகை

**வினா 3.** சென்னைக்கு வந்த சத்ரபதி சிவாஜி வழிபட்ட அம்பிகை என்ற சிறப்பு இவர்களில் யாருக்கு உரியது?

அ. மாங்காடு காமாட்சி

ஆ. திருவேற்காடு கருமாரி

இ. மயிலை கற்பகாம்பாள்

ஈ. காளிகாம்பாள்

**வினா 4.** சக்திபீடங்கள் எத்தனை?

அ. ஐம்பத்தொன்று

ஆ. அறுபத்திநான்கு

இ. நூற்றெட்டு

ஈ. ஆயிரத்தெட்டு

**வினா 5.** விநாயகருக்கு முதலில் கொழுக்கட்டை நிவேதனம் செய்தவர் இவர்களில் யார்?

அ. சரஸ்வதி

ஆ. ஔவையார்

இ. அனுசுயா

ஈ. அருந்ததி

**வினா 6.** விநாயகர் சதுர்த்தி வீடுகளில் கொண்டாடப்படாமல் கோயிலில் மட்டும் கொண்டாடப்படும் தமிழகத்திலுள்ள ஊர் இவற்றில் எது?

அ. பிள்ளையார்பட்டி

ஆ. கணபதீச்சரம்

இ. கணபதி அக்கிரஹாரம்

ஈ. பிள்ளையார் பாளையம்.

**வினா 7.** 'பெரிய திருவடி'' என்று அழைக்கப்படுபவர் இவர்களில் யார்?

அ. பெரியாழ்வார்

ஆ. இளையாழ்வார்

இ. கருடாழ்வார்

ஈ. பரதாழ்வார்

**வினா 8.** கண்ணபெருமான் அருச்சுனனுக்குக் கீதோபதேசம் செய்தபோது அதனை அருச்சுனனோடு சேர்ந்து கேட்டவர் இவர்களில் யார்?

அ. வீடுமர்

ஆ. தருமர்

இ. அனுமன்

ஈ. பீமன்

**வினா 9.** ''மனித்தப்பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே'' என்று பாடிய அருளாளர் இவர்களில் யார்?

அ. வள்ளலார்

ஆ. உமாபதி சிவம்

இ. மெய்கண்ட சிவம்

ஈ. திருநாவுக்கரசர்

வினா 10. அறுபத்து மூவரில் ஒருவராக இல்லாதவர் இவர்களில் யார்?

அ. மாணிக்கவாசகர்

ஆ. சுந்தரர்

இ. அப்பர்

ஈ. திருஞானசம்பந்தர்

வினா 11. திருஞானசம்பந்தர் படிக்காசு பெற்ற திருத்தலம் இவற்றில் எது?

அ. சீர்காழி

ஆ. திருவாடுதுறை

இ. திருவீழிமிழலை

ஈ. திருமயிலை

வினா 12. சிவபெருமான் - பார்வதி திருமணம் நடைபெற்ற திருநாள் இவற்றில் எது?

அ. தைப்பூசம்

ஆ. மாசிமகம்

இ. பங்குனி உத்திரம்

ஈ. கார்த்திகை தீபம்

வினா 13. இவற்றில் ''தூல பஞ்சாக்கரம்'' எது?

அ. சிவாய சிவ

ஆ. சிவாய நம

இ. சிவ

ஈ. நமசிவாய

வினா 14. புதிதாக ஆலயம் கட்டி முடித்து கும்பாபிஷேகம் செய்வதற்கு ஆகமத்தில் வழங்கப் பட்டுள்ள பெயர் இவற்றில் எது?

அ. ஆவர்த்தம்

ஆ. அநாவர்த்தம்

இ. புனராவர்த்தம்

ஈ. அந்தரிதம்

வினா 15. திருநாவுக்கரசருக்குப் பெரிதும் பெருமை சேர்த்த திருப்பணி இவற்றில் எது?

அ. திருக்குளத் திருப்பணி

ஆ. நந்தவனத் திருப்பணி

இ. உழவாரப் பணி

ஈ. அன்னதான அறப்பணி

சரியான விடை:

1. இ. இடும்பன்

2. ஈ. திருத்தணிகை

3. ஈ. காளிகாம்பாள்

4. இ. நூற்றெட்டு

5. ஈ. அருந்ததி

6. இ. கணபதி அக்கிரஹாரம் (இது தஞ்சை மாவட்டத்தில் உள்ளது.)

7. இ. கருடாழ்வார்

8. இ. அனுமன்

9. ஈ. திருநாவுக்கரசர்

10. அ. மாணிக்கவாசகர்

11. இ. திருவீழிமிழலை


12. இ. பங்குனி உத்திரம்


13. ஈ. நமசிவாய

14. அ. ஆவர்த்தம்

15. இ. உழவாரப்பணி

★★★





மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 12–1–2001 அன்று ''கோடி தீபம் ஏற்றுதல் தொடக்க விழா'' மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்கள். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு வீ. தங்கவேலு இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரின் துணைவியார் அவர்கள் ''திருவெம்பாவை'' போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கியும் கோடி தீபத்தின் முதல் தீபத்தை ஏற்றி வைத்தும் சிறப்பித்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர் / செயல் அலுவலர் திருமிகு போ. இராமராஜ் பிஎஸ்சி., பிஎல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.







மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் 12-1-2001 அன்று ''திருவாசகக் கருத்தரங்கம்'' மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்கள் திருவாசகக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கி, ''சிவபுராணம்'' பொருள் குறித்த ஆய்வுரையும் நிகழ்த்தினார்கள். மதுரை இணை ஆணையாளர் திருமிகு பொன். செல்வராசு அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் முனைவர் மா. வண்ணமுத்து, முனைவர் த. அமிர்தலிங்கம், முனைவர் இரா. மோகன், முனைவர் நிர்மலா மோகன் மற்றும் பேராசிரியப் பெருமக்கள் பலர் பங்கு கொண்டனர். மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் இணை ஆணையாளர் / செயல் அலுவலர் திருமிகு போ. இராமராஜ் பிஎஸ்சி., பிஎல். அவர்கள் விழா ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,*** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.